18th
February
2024

www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 19 | பக்கங்கள் - 13 | editor.uthayam@gmail.com



வெற்றியின் இரகசியம் முயற்சி! 07 ›››

# மொட்டுவின் ஆதரவை இழப்பதால் பொதுத் தேர்தலுக்கு ஜனாதிபதி முஸ்தீபு



## ஏப்ரலில் கலைக்கவும் திட்டம்
## ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்க முயற்சி

எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் பாராளுமன்றத்தை கலைத்து ஜூலை மாதத்தில் பொதுத்தேர்தலை நடத்துவது சம்மந்தமாக ஜனாதிபதி அவதானம் தற்போது செலுத்தப்பட்டிருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

பாராளுமன்றத்திலுள்ள மொட்டுக் கட்சி உறுப்பினர்களுடைய ஆதரவினை ரணில் விக்ரமசிங்க அவர்கள் நாளுக்கு நாள் இழந்து வருவதன் காரணமாகவும் ஜே.வி.பி அணியின் எழுச்சி அதிகரித்து வருவதன் காரணமாகவும் ஜனாதிபதி இத்தீர்மானத்தை அனேகமாக எடுக்கலாமென

03ம் பக்கம்பார்க்க...

## நாளை இலங்கை வரும் ஈரானிய வெளிவிவகார அமைச்சர்



வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் அழைப்பின்

02ம் பக்கம்பார்க்க...

# முழு உலகமும் இஸ்ரேலை கண்டிக்கையில் இலங்கை உறவுகளை ஆழமாக புதுப்பிக்கிறது

## முன்னாள் அமைச்சர் இம்தியாஸ் கவலை

(பேருவளை.பீ.எம்.முக்தார்)

இஸ்ரேலுக்கு எதிராக சர்வதேச அமைப்புக்களினால் போர்க் குற்றம் சுமத்தப்பட்டு வரும் நிலையிலும் தென் ஆபிரிக்கா சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை தற்போது இடம் பெறும் சூழ் நிலையிலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் இஸ்ரேலுடன் புதிது புதிதாக ஏற்படுத்தும் உறவுகள்,ஒப்பந்தங்கள் குறித்து பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ்

02ம் பக்கம்பார்க்க...



# தேர்தல் மோசடி பற்றி விசாரிக்குமாறு இம்ரான் கட்சி வலியுறுத்து

## தேர்தல் அதிகாரி விலகியதால் மேலும் சர்ச்சை



பாகிஸ்தானில் கடந்த 8 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் பல மோசடிகளும் முறைகேடுகளும் நடைபெற்றுள்ளதோடு இதற்கு தலைமைத் தேர்தல் ஆணையாளரும், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியும் உறுதுணையாக இருந்துள்ளார்கள் எனக் கூறி ராவல்பிண்டி தேர்தல் ஆணையாளர் லியாகத் அலி தம் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

பல்வேறு தொகுதிகளில்

03ம் பக்கம்பார்க்க...

# தேசிய அரசாங்கத்தின் மூலமே நாட்டை கட்டியெழுப்ப முடியும்



## எங்கள் ஆதரவும் அதற்கு உண்டு
### மடவளை நிகழ்வில் ஹக்கீம் கருத்து

(எம்.ஏ.அமீனுல்லா)

தேசிய அரசுக்கான முயற்சி ஒன்றின் மூலமே நாட்டின் பொருளாதாரத்தை

02ம் பக்கம்பார்க்க...

# பள்ளிவாசல் அபிவிருத்திக்காக அரசு 50இலட்சம் ஒதுக்கீடு

## தெரிவிக்கிறார் பணிப்பாளர் பைசல்



நாட்டின் பள்ளிவாசல்களை அபிவிருத்தி

02ம் பக்கம்பார்க்க...

# ஒருமித்து விடைபெற்ற உயிர் நண்பர்கள் சாய்ந்தமருது மாளிகைக்காட்டில் சோகம்!





(ஹுதா உமர்)

மாளிகைக்காடு- சாய்ந்தமருது பிரதேசத்தை சேர்ந்த இரண்டு மாணவர்கள் நிந்தவூர் பிரதேச கடலில் நேற்று மாலை புகைப்படம் எடுத்து விளையாடிக் கொண்டிருந்தபோது கடலில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல்

03ம் பக்கம்பார்க்க...





உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும் | ஃபிச் ரேட்டிங்: RWN (lka) ஸ்திரமான நிலை

## முழு...

(முன் பக்கத் தொடர்ச்சி)

பாக்கீர் மாக்கார் கவலை தெரிவித்துள்ளார்.

பேருவளையில் இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது,

இஸ்ரேல் பலஸ்தீனத்தில் மேற்கொள்ளும் அராஜகம்,அநியாயங்கள்,மனித உரிமை மீறல்கள் போர் குற்றங்கள் காரணமாக முழு உலகமும் இஸ்ரேலை கண்டித்து வருகிறது. இஸ்ரேலுடனான உறவுகளையும் துண்டித்து வருகிறது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் இலங்கை அரசாங்கம் இஸ்ரேலுடன் நேரடி விமான சேவைக்கான ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டுள்ளமை,போர்ப் பதற்றம் சூழ்ந்துள்ள செங்கடலுக்கு எமது தாய் நாட்டு படை வீரர்களை அனுப்புவது என்ற முடிவு,இஸ்ரேலிய அமைச்சரின் இலங்கை விஜயம் என பல விவகாரங்கள் அவசர அவசரமாக நிகழ்ந்து வருகின்றன.

போர் பதற்றம் நீடித்து மக்கள் தினமும் அநியாயமாக கொல்லப்பட்டு சர்வதேச அமைப்புக்களினால் போர்க் குற்றம் சுமத்தப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையிலும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தினமும் ஆதாரபூர்வமான அறிக்கைகள் வெளியாகும் நிலையில் அதனுடன் தொடர்புடைய நாட்டுடன் ஏன் இத்தகைய உறவுகள் எனவும் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் கேள்வி எழுப்பினார்.

சர்வதேசத்துடனான தொடர்புகள் பிரதானமானவையே. நாம் அணிசேர கொள்கை கொண்டவர்கள்.

போர் பதற்றம் சூழ்ந்து கொண்டிருக்கும் செங்கடலுக்கு எமது படைவீரர்களை அனுப்புவதென முடிவு செய்துள்ளமையானது மடத்தனமானதாகும். வெளிநாட்டு நிகழ்ச்சி நிரலுக்கு அடிமையாகி எமது வெளிநாட்டு கொள்கை உட்படுத்தப்பட்டுள்ளதென புரிகிறது.

இலங்கை அணி சேரா கொள்கையை கொண்டது.எனினும் தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகள் ஏதேனும் அணி சார்ந்ததாக இருக்கிறதோ அல்லது இஸ்ரேல் சார்பு நிலைப்பாட்டை கொண்டுள்ளதா என எண்ணத் தோன்றுகிறது.

ஒடுக்கப்படும் பலஸ்தீன மக்களுக்கு சார்பான நிலைப்பாட்டையே கடந்த கால இலங்கை ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் கொண்டிருந்தனர். பெரும்பான்மை இலங்கை மக்களிடையே பலஸ்தீன சார்பான அனுதாபம் உள்ளது.

உலகத்தினதும் உலக மக்களினதும் அபிப்ராயத்தை சிறிதேனும் மதிக்காது இஸ்ரேல் பலஸ்தீன் மீது அராஜகம் புரிகிறது. இதை சர்வதேசம் கண்டிக்கிறது.இஸ்ரேலுடனான உறவுகளை துண்டிக்கிறது.இவ்வாறான ஒரு நிலையில் இலங்கை அரசு இஸ்ரேலுக்கு நேரடி விமான சேவைக்கான ஒப்பந்தம் செய்வதானது அவர்களுக்கு கொடுக்கும் அங்கீகாரமாக அமையும்.எம் கண் முன்னே காஸாவிலும் ரபாவிலும் நிமிடத்திற்கு நிமிடம் வீடுகள் மீதும்,ஆஸ்பத்திரிகள் மீதும்,அகதி முகாம்கள் மீதும் குண்டு வீசி மக்களை பச்சை பச்சையாக அநியாயமாகக் கொலை செய்யும் இஸ்ரேலை இன்று உலகமே வெறுக்கிறது.

காஸாவில் மனித குலத்திற்கெதிராக நிகழ்த்தப்படும் போருக்கு எதிராக முழு உலக மக்களும் ஒன்று சேர்ந்துள்ள நிலையில் இலங்கை அரசானது இஸ்ரேலுடனான உறவை மேலும் வளர்ப்பது ஆச்சரியத்துக்குள்ளானது.அதைச் செய்வதற்கு இது உகந்த தருனமல்ல என்றும் இந்தியாஸ் எம்.பி. குறிப்பிட்டார்.

பலஸ்தீன ஆதரவு விடயத்தில் தற்போதைய அரசு இரட்டை வேடம் போடுவது தெட்டத் தெளிவாக வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

## பள்ளிவாசல்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

செய்வதற்காக இம்முறை வரவு செலவு திட்டத்தில் 50 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாக முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களத்தின் பணிப்பாளர் பைசல் ஆப்தின் தெரிவித்தார்.

பௌத்த விவகார கலாச்சார அமைச்சர் விதுர விக்ரம நாயக்கவின் வழிகாட்டலில் இப்பணம் முக்கியமாக அபிவிருத்தி தேவைப்படுகின்ற பள்ளி வாசல்களுக்கு ஒதுக்கப்படுமென பணிப்பாளர் தெரிவித்தார்.

## தேசிய...

(முன் பக்கத் தொடர்ச்சி)

கட்டியெழுப்ப முடியும் என ஸ்ரீல மு. கா தேசிய தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் கண்டி - மடவலையில் வைத்து தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ஒரு தேசிய அரசின் தோரணையில் அதாவது எதிர்க்கட்சி இல்லாத ஒரு பாராளுமன்றத்தை உருவாக்கி அங்கு, ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி என்பன ஒன்றிணைந்து, இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ள படுமாயின் அதற்கு எங்களது ஆதரவு கிடைக்கும் எனவும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் திண்ணமாக அறிவிப்பு செய்தார்.

சர்வதேச விளையாட்டு வீரர்களை உருவாக்கிய மடவளை பஸார் பிரதேசத்தில் தனியார் அமைப்பினால் நிர்மாணிக் கப்பட்டுள்ள "எக்சன்" உள்ளக விளையாட்டரங்கின் திறப்பு விழாவுக்கு பிரதம அதிதியாக பிசன்னமாயிருந்த பின்னர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்து பேசுகையில் ஸ்ரீல. மு.கா தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (16) வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற இந்த நிகழ்விற்கு கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், மத்திய மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள் திலின பண்டார தென்னகோன், ஹிதாயத் சத்தார் அகில இலங்கை மொத்த மற்றும் சில்லறை வியாபார சங்கத்தின் தலைவர் டபிள்யு.எம். நஜீம் உள்ளிட்ட பல அதிதிகள் கலந்து கொண்டனர்.

மு .கா தலைவர் ரவூப் ஹக்கீம் தமதுரையில் மேலும் கூறுகையில் :

எதிர் வருகிற பாராளுமன்ற பொது தேர்தலானது, அது ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக நடைபெறுகின்ற ஒரு நிலைமை காணப்படுமாயின் நாம் ஓர் அங்கமாக இருக்கும் எமது கட்சியான சமகி பெரமுன கட்சியானது தமக்கான பெரும்பான்மைகளை சுவீகரித்துக் கொள்ளும் வகையில் பல முயற்சிகளை நாம் முன்னெடுக்க வேண்டி வரும் என தெரிவித்த தலைவர் ரவூப் ஹக்கீம், தேர்தலுக்கு பிற்பாடு எல்லா கட்சிகளும் இணைந்து ஆட்சி அமைப்பிற்கான ஒரு முயற்சியை மேற்கொள்வது தான் இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சனைக்கு தீர்வாக அமையும் என தான் நம்புவதாகவும் வலியுறுத்தினார்.

இன்று இருக்கின்ற பாராளுமன்ற சமன்பாட்டை வைத்து ஒரு தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்க முடியாது ஏனெனில் இன்று பாராளுமன்ற நிலைப்பாடு மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு சமன்பாடு என்பது அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஆகவே, தேசிய அரசாங்கம் என்று மக்களால் நிராகரிக்கப்பட்டவர்களுக்கு அதிகப்படியான பெரும்பான்மை உள்ள ஒரு அரசாங்கத்தை அமைப்பதன் மூலம் மக்கள் ஒருபோதும் அதில் திருப்தி காணப்போவதில்லை. என அவர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே, அவசரமாக தேசிய அரசாங்கமொன்று அமைப்பதல்ல, மாறாக தேர்தல் ஒன்றின் பிற்பாட்டில் ஒரு தேசிய அரசாங்கத்திற்கான முயற்சியொன்றை மேற்கொள்வதே சிறந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பதவி வகித்த கடந்த இரண்டு வருட காலத்துக்குள் எத்தனையோ சர்வ கட்சி மாநாட்டிற்கு அழைத்திருந்தார். இவ்வாறு ஒவ்வொரு மாநாட்டிலும் இனப்பிரச்சனைக்கான தீர்வு, சிறுபான்மை மக்களுக்கான தீர்வு சம்பந்தமாக ஒரு மாதத்தில் தருவேன் இரண்டு மாதத்தில் தருவேன் சுதந்திர தினத்திற்கு முன்பு தருவேன் என்றெல்லாம் கூறி விட்டு, இறுதியாக ஒன்றுமே இதுவரை நடந்ததாக இல்லை, அத்தனையும் வெறுமன பசகு வார்த்தைகளை கூறி, ஏமஞ் செய்து வந்துள்ளார் என்பதே யதார்த்தம்.

எனவே அவருடைய எந்த உத்தரவாதத்தையும் இப்போதைக்கு எந்த கட்சியும் நம்ப தயார் இல்லை என்பதுதான் தற்போதைய எமது நிலைப்பாடு என அவர் மேலும் குறிப்பிட்டார்.

## நாளை...

(முன் பக்கத் தொடர்ச்சி)

பேரில், ஈரான் இஸ்லாமிய குடியரசின் வெளிவிவகார அமைச்சர் டாக்டர் ஹொசைன் அமீர் அப்துல் அஹியன் 2024 பெப்ரவரி 19-21 வரை இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது ஈரான் வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரை சந்தித்து கலந்துரையாட உள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்யும் அமைச்சர் மற்றும் அவரது குழுவினர் வெளிவிவகார அமைச்சில் அமைச்சர் அலி சப்ரியுடன் உத்தியோகபூர்வ கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளனர்.







# கலாநிதி ஏ.எம்.ஏ.அஸீஸ் 50வது ஆண்டு நினைவு தினம்





(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

கலாநதி ஏ.எம்.ஏ.அஸீஸ் அவர்கள் முஸ்லிம்கள் உள்ளிட்ட இலங்கையில் உள்ள சகல மக்களுக்குக்கும் ஆற்றிய சேவையைப் பாராட்டி அவரது 50வது ஆண்டு ஞாபகார்த்த நிகழ்வினை கலாநதி ஏ.எம்.ஏ.அஸீஸ் பவுண்டேசன் கடந்த சனிக்கிழமை ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு பவுண்டேசனின் தலைவர் காலித் எம் பாறுக் தலைமையில் கொழும்பு ஸாஹிராக் கல்லூரி கபூர் மண்டபத்தில் சிறப்பாக இடம் பெற்றது.

இந்நிகழ்விற்கு விசேட பேச்சாளராக சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் எம். சொர்னராஜா கலந்து கொண்டு கலாநிதி ஏ.எம்.ஏ.அஸீஸ் பற்றி நீண்ட உரையாற்றினார். அவருடன் இன்டர் நெசனல் புரஜெக்ட் ஆலோசகர் ஏ.ஜி.ஏ.பாரி. கொழும்பு டைம்ஸ் ஆசிரியர் ரசூல்டீன் வை.எம்.எம்.ஏயின் தேசியத் தலைவர் இஹ்ஸான் ஏ. ஹமீட் உள்ளிட்டவர்கள் உரையாற்றினர். ஸாஹிராக் கல்லூரியின் அதிபர் ரிஸ்வி மரைக்கார், கலாநிதி அசீசின் குடும்ப உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது அஸீஸ் அவர்கள் தொடர்பான இரண்டு புத்தகங்கள் வெயிளிட்டு வைக்கப்பட்டதுடன் விசேட பேச்சாளருக்கு நினைவுச் சின்னம்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டது.

## மொட்டுவின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.தே.க வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றால் நாடு இருக்கின்ற தேர்தல் அலைப்படி ஜாதிக ஜனபலவேகய என்ற ஜே.வி. பி அணி கூடுதலான ஆசனங்களை பெற்றாலும் விகிதாசாரப்படி தேர்தல் நடைபெறுவதால் ஐக்கிய மக்கள் சக்திக்கும் அதேயளவு தொகுதிகள் கிடைக்கலாமென இங்கு ஆராயப்படுகின்றது.

இந்த நிலைமையின் கீழும் தமிழ் முஸ்லிம் கட்சிகளை தொடர்புபடுத்தி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் ஆதரவு வழங்குவார்கள். அதன் மூலம் ஜனாதிபதி தேர்தலில் அக்கட்சிக்கு கூட்டமைப்பில் போட்டியிடுவதற்கு சந்தர்ப்பமொன்றை ஏற்படுத்தலாமென்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜூலை மாதத்தில் தேர்தல் நடத்தப்பட்டால் அது ஜனாதிபதி தேர்தல் நடத்துவதற்கு நிதி பிரச்சினையாக இருக்கலாமென்றும் அதனடிப்படையில் பணம் இல்லை என்று கூறி ஜனாதிபதி தேர்தலை ஒத்திப்போடுவது குறித்து ஜனாதிபதி அவர்கள் முயற்சிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீமை கொழும்பில் உள்ள தனியார் ஹோட்டலில் வழுத்தூர் வெள்ளம். ஜி. டாக்டர் எம். ஜே. முஹம்மது இக்பால், எம். ஜே. அப்துல் ரவூப், ஊடகவியலாளர்கள் திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது ஆகியோர் மரியாதை நிமித்தமாக சந்தித்து உடன் இலங்கை முஸ்லிம் மீடியா போரத்தின் பொருளாளர் ஜெஸ்மீன், கே. சதக்கத்துல்லா, இமேஜ் ஷாகுல் ஹமீது மற்றும் பலர் உடன் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## ஒருமித்து..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போகியிருந்தனர். அதில் சூர்தீன் முஹம்மட் முன்சிப் (வயது 15) எனும் மாளிகைக்காடு பிரதேசத்தை சேர்ந்த மாணவரின் ஜனாஸா இன்று காலை மீட்கப்பட்டது. அதனை தொடர்ந்து சாய்ந்தமருதை சேர்ந்த ரிஸ்வான் முஹம்மட் இல்ஹம் (வயது 15) எனும் மாணவனின் ஜனாஸா இன்று மதியம் மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் தெரியவரும் விடயம் யாதெனில், சாய்ந்தமருதின் பிரபல பாடசாலை மாணவர்களான 13-15 வயதுக்குட்பட்ட 08 மாணவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை ஜ/ம்மா தொழுகையை முடித்துக்கொண்டு துவிச்சக்கர வண்டியில் நிந்தவூர்- ஒலுவில் எல்லை கடற்கரைக்கு சென்று புகைப்படம் எடுத்து விளையாடிக் கொண்டிருந்த போது அன்று மாலை 04.20 மணி அளவில் அதில் இருவரை கடலலை உள்ளிழுத்து சென்றுவிட்டதாக உயிர் தப்பிய மாணவர்களிடம் இருந்து பெறப்பட்ட முதற்கட்ட விசாரணையில் தெரியவந்தது.

கடலில் இழுத்து காணாமல் போன மாணவர்களை சம்பவத்தை கேள்வியுற்ற நிமிடம் முதல் மீனவர்களும், பொதுமக்களும் தேடி அலைந்து இந்த ஜனாஸாக்களை மீட்டுள்ளனர். சம்பவ இடத்திற்கு விஜயம் செய்த சம்மாந்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி கௌரவ எம்.ரீ.சபீர் மரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டார்.

மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர்களான எம்.ஏ. பசீல், ஆர். விமலேந்திரன் தலைமையிலான பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தேர்தல்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இம்ரான் கான் ஆதரவு சுயேட்சை வேட்பாளர்கள் சுமார் 80000 வாக்குகள் முன்னிலையில் இருந்துள்ளனர். ஆனால் போலி வாக்குசீட்டுக்கள் மூலம் மற்ற கட்சி வேட்பாளர்கள் வெற்றிபெற செய்துள்ளனர். அந்த மோசடியை கண்டித்து, தான் பதவியை இராஜினாமா செய்ததாக ராவல்பிண்டி தேர்தல் ஆணையாளர் லியாகத் அலி தெரிவித்தார்.

இதேவேளை வெற்றி பெற்ற அமைச்சர் ஹபீஸ் நயீமுர் ரஹ்மான் தனது பதவியை விட்டு விலகுவதாக அறிவித்துள்ளார். ஜமாத்தே இஸ்லாமிய கட்சியின் ஹபீஸ் நயீமுர் ரஹ்மான் என்பவர் இந்த அறிவிப்பினை செய்துள்ளார். கராச்சியிலுள்ள தேர்தல் தொகுதியில் தன்னுடன் போட்டியிட்ட இம்ரான்கான் ஆதரவு சுயேட்சை வேட்பாளர் தன்னை விட கூடுதலான வாக்குகள் எடுத்துள்ளதாகவும் அவருடைய வாக்குகள் குறைக்கப்பட்டுள்ளதாகவும் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இம்ரான்கான் அணியினர் உயர்நீதிமன்றத்தில் தேர்தலில் மோசடி இடம்பெற்றது தொடர்பாக வழக்கு தாக்கல் செய்திருக்கின்ற நிலையில் இந்த அறிவிப்பு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.









www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 FEBRUARY 18 - SUNDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# இக்கால தேவைக்கேற்ப வக்பு சட்டத்தில் திருத்தங்கள் அவசியம்

1956ம் ஆண்டின் 51ஆம் இலக்க வக்பு சட்டத்தில் திருத்தங்களை அமுல் படுத்துவதற்கு புத்தசாசன மத மற்றும் கலாச்சார அமைச்சு தீர்மானித்துள்ளது.

மேற்கொள்ளவேண்டிய திருத்தங்களை சிபாரிசு செய்வதற்காக முன்னாள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் ஏ.டபல்யூ. சலாம் தலைமையில் ஏழு பேர் கொண்ட நிபுணர் குழு ஒன்றை புத்தசாசன அமைச்சு நியமித்துள்ளது.

1956ம் ஆண்டு முதல் அமுலில் உள்ள வக்பு சட்டம் 1962ம் ஆண்டும், 1983ம் ஆண்டுகளிலும் திருத்தப்பட்ட போதும் காலத்தின் தேவைக்கேற்ப மேலும் பல மாற்றங்கள் செய்யப்பட வேண்டி இருப்பதினால் இது தொடர்பாக அமைச்சரவைக்கு சிபாரிசு செய்வதற்கு ஏழு பேர் கொண்ட குழு ஒன்றை புத்தசாசன அமைச்சின் செயலாளர் நியமித்துள்ளார்.

நாட்டில் உள்ள சுமார் 2000றக்கு மேற்பட்ட பள்ளிவாசல்கள், தக்கியாக்கள், சியாரங்கள் வக்பு சட்டத்தினால் நிர்வகிக்கப்படுகிறது. 1956ம் ஆண்டு சட்டம் இரு முறை திருத்தப்பட்ட போதும் நாட்டின் தற்போதைய மற்றும் எதிர்கால தேவைகளுக்கு அமைவாக இச்சட்டம் பல திருத்தங்களை வேண்டி நிற்கிறது.

குர்ஆன் மதரசாக்கள் மற்றும் அரபுக் கல்லூரிகளுக்கான வழிகாட்டல்கள் தற்போதைய வக்பு சட்டத்தில் இல்லை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பள்ளிவாசல் நிர்வாகங்களை மேற்கொள்வதற்கு நம்பிக்கையாளர்களை நியமனம் செய்தல், அவர்களது தகைமைகள் என்ன என்பது போன்ற விடயங்களும் வக்பு சட்டத்தில் தெளிவாக குறிப்பிடப்படாமையினால் பள்ளிவாசலின் நிர்வாக சிக்கல்கள் ஏற்படும் போது நீதிமன்றங்களை நாடுவது தொடர்பாகவும் விமர்சனங்கள் எழுப்பப்படுகின்றது. இது தொடர்பான தெளிவான வழிகாட்டல்கள் வழங்கப்படுவது அவசியமாகும்.

இக் குழுவிற்கு மூன்று மாத காலமே வழங்கப்பட்டுள்ளது. இக் குழு துரிதமாக இயங்கி செயற்பட வேண்டும். முஸ்லிம் சட்டத்தரணிகள் சங்கம், அகில இலங்கை ஜம்மியதுல் உலமா, பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முஸ்லிம் எம் பிக்கள் முதலானோரது ஆலோசனைகளைப் பெற்று சமூகத்தின் தேவையை கருத்தில் கொண்டு பொருத்தமான சிபாரிசுகளை செய்வது இக் குழுவின் முன்னுள்ள பொருப்பாகும்.

முஸ்லிம் திருமண சட்டம் தொடர்பாக பல வருடங்களுக்கு முன் நியமிக்கப்பட்ட குழு அதன் சிபாரிசுகளை வழங்க தாமதித்ததன் காரணமாக சமூகம் பல சிக்கல்களை எதிர்நோக்கியது குறிப்பிடத்தக்கது. ஆகவே இந்த குழு அவ்வாறு செய்யப்படாமல் தமக்கு வழங்கப்பட காலத்துக்குள் பொருத்தமான சிபாரிசுகளை முன் வைத்து இந்த அமைச்சின் எதிர்பார்பினை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பது அவசியம் ஆகும்.

நமது அயல் நாடான இந்தியாவின் தமிழ்நாட்டில் வக்பு வாரியம் சிறப்பாக இயங்கி வருகின்றது. பள்ளிவாசலின் சொத்துக்கள் தொடர்பாக தமிழ்நாட்டுக்கு வக்பு வாரியத்துக்கு சிறப்பான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனால் பள்ளிவாசலுக்குரிய சொத்துக்கள் மூலம் பள்ளிவாசலுக்கு வருமானம் கிடைக்கின்றது. நமது நாட்டில் முன்னோர்களால் வக்பு செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான ஏக்கர் காணிகள், நூற்றுக்கணக்கான கடைகள், கட்டடங்கள் துஷ்பிரயோகம் செய்வது குறித்து விமர்சனங்கள் எழுப்பப்பட்டு வருகின்றது. இது போன்ற விடயங்கள் குறித்து சரியான வழிகாட்டல்கள் வகுக்கப்பட வேண்டும். இக்குழு இது குறித்து கவனம் செலுத்துவது அவசியமாகும்.



# மஸ்ஜிதுகளில் வணக்க வழிபாடுகள் போன்று மக்கள் நலன்பேணலும் பெருக வேண்டும்

(உக்குவளை ஜலீல்)

மஸ்ஜித்களை புணரமைப்பதைப் போன்றே, மஸ்ஜித்களில் வணக்க வழிபாடுகளும் மக்களுக்கு நன்மை தரக்கூடிய பணிகளும் அதிகரிக்க வேண்டும் என்று அஷ்ஷெய்க் ரிஸ்வி முப்தி தெரிவித்தார்.

உக்குவளை மாருகொன ஜும்ஆ மஸ்ஜித் புணரமைப்பு நடவடிக்கைக்கு அடிக்கல் வைக்கும் நிகழ்வில் உரையாற்றும் போது, அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் தலைவர் அஷ்ஷெய்க் ரிஸ்வி முப்தி மேற்கொண்ட உரையின் முக்கிய அம்சங்கள் இங்கே தொகுத்து வழங்கப்படுகின்றது.

“இன்று மஸ்ஜித்களை எவ்வளவும் பணம் செலவழித்தும் புணரமைப்புச் செய்யலாம். அதற்காக தொடர்ந்தும் உதவுபவர்களும் உள்ளனர். எனினும், மஸ்ஜித்களை புணரமைப்புச் செய்வது மட்டும் முக்கியமல்ல. மாறாக, அங்கு தொழுகை உட்பட வணக்க வழிபாடுகள் அதிகரிக்க வேண்டும். மக்களுக்கு நன்மை தரக்கூடிய, பயனுள்ள பல பணிகளும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

நம் நாட்டில் சுமார் 2600க்கு மேற்பட்ட மஸ்ஜித்கள் இருப்பதாக அறியமுடிகிறது. அத்துடன் தக்கியாக்கள், மத்ரஸாக்கள் என்பனவும் ஏராளம் உண்டு. எனினும், இவற்றுள் இதுவரை பதிவு செய்யப்படாதவைகளும் உள்ளன. இன்று ஏராளமான பண மற்றும் பொருள் செலவில் மஸ்ஜித்கள் புணரமைக்கப்படுவதைக் காணமுடிகிறது. மஸ்ஜித்களைப் பதிவு செய்வதில் அதே கரிசனை இருக்க வேண்டும். பதிவு விடயத்தில் கவனயீனமாக இருக்கக் கூடாது.


சவூதி போன்ற நாடுகளிலிருந்து இலங்கை வரும் சில சமூக ஆர்வலர்கள் முஸ்லிம் நிலையங்களுக்கு வருகை தந்து, தமது காலஞ்சென்ற உறவினர்களின் ஞாபகார்த்தமாக காணிகளைக் கொள்வனவு செய்வதிலும் தக்கியா மஸ்ஜித்களை அமைப்பதையும் கேள்விப்படுகிறோம்.

முஸ்லிம் சனப் பெருக்கத்தைக் கருத்திற்கொண்டு, மஸ்ஜித்கள் புணரமைக்கப்பட வேண்டுமென பேசப்பட்டாலும், முஸ்லிம் சமூகத்தினரிடம் இருக்க வேண்டிய மிக முக்கியமான பண்பான ஒற்றுமையைக் காண முடியாதுள்ளது. முஸ்லிம் சமூகம் இயக்க ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் கொள்கை ரீதியாகவும் பிரிந்துள்ளதைக் காண முடிகிறது.

ஏராளமான பண, பொருள் செலவில் மஸ்ஜித்களைப் புணரமைப்பதில் கரிசனை காட்டும் நிர்வாகிகள், தமது ஊர்களில் அடிப்படை வசதி வாய்ப்புகளின்றிய நிலையில் வாழும் மக்கள் பற்றி கவனிக்கத் தவறிவிடுகின்றனர். அது மட்டுமன்றி, தம் மஸ்ஜித்களில் பல வருடங்களாகக் கடமைபுரியும் வசதியற்ற கதீப் மற்றும் முஅத்தின்களின் நலன்களையும் கவனிக்கத் தவறிவிடுகின்றனர்.

மஸ்ஜித்கள் தொழுவதற்காக மட்டுமல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அங்கு அறிவுசார்ந்த, ஆன்மீக, நல்லொழுக்க, தலைமைத்துவ, அரசியல் பயிற்சிகள் என சகல விடயங்களும் கற்பிக்கப்படல் வேண்டும். அதனூடாக சமூகத்தை நல்வழிப்படுத்த வேண்டும்.

இன்று போதைப் பொருட்கள் விற்பனை- பாவனைகளில் சம்பந்தப்பட்ட கைதுகளும் வழக்குகளும் இடம்பெற்று வருகின்றன. இதில் பெரும்பாலானவர்கள் முஸ்லிம்கள் என்றால் ஆச்சரியமில்லையா? எனவே, இதுவிடயத்தில் மஸ்ஜித் நிர்வாகிகள் அதிக கவனம் எடுக்க வேண்டியுள்ளது.



# சமூக சேவைகளுக்கான ஏறாவூர் இளங்கலை பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் புதிதாக பல்கலைக்கழகம் தெரிவானோருக்கான வரவேற்பு மற்றும் பாராட்டு நிகழ்வு







சமூக சேவைகளிற்கான ஏறாவூர் இளங்கலை பட்டதாரிகள் சங்கம் ஏற்பாடு செய்திருந்த 2021/2022 மற்றும் 2022/2023 ஆகிய கல்வி ஆண்டுகளில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான மாணவர்களுக்கான வரவேற்பு மற்றும் பாராட்டு

நிகழ்வு இறை உதவியுடன் கடந்த 04.02.2024ஆம் திகதி ஏறாவூர் அல் அஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலையில் ஏறாவூர் இளங்கலை பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் திரு. மஹ்சூம் செய்யத் அஹமட் அவர்களின் தலைமையில் நிறைவேற்று, ஒருங்கிணைப்புக் குழுவின் ஒத்துழைப்புடன் வெகு விமர்சையாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தரும் ஐஊளுவு பல்கலைக்கழகத்தின் தற்போதைய துணைவேந்தரும் ரஜ்ரட்ட பல்கலைக்கழகத்தின் வேதியியல் பேராசிரியருமான திரு ஜெயந்தலால் ரத்னசேகர அவர்கள் கலந்து சிறப்பித்ததோடு விஷேட உரை ஒன்றையும் ஆற்றியிருந்தார். மேலும் விஷேட மற்றும் கௌரவ அதிதிகளாக இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி திரு ஷிப்லி,

உள்ளூராராட்சி உதவி ஆணையாளர் திரு ஜே.எம்.அல் அமீன், அகில இலங்கை ஜம்இயத்துல் உலமா - ஏறாவூர் கிளை தலைவர் அஸ் ஷெய்ஹ் ஏ.எல். ஸ ாஜித் ஹூஸைன் (பாகவி),சமூக சேவை உத்தியோகத்தர் ளு.யு.ஊ.நஜிமுதீன், ஏறாவூர் ரஹமானியா வித்தியாலய அதிபர் உவைஸ் தாவூத் மற்றும் வைத்தியர் ரிஷ ான் அஹ்மத்,சமூக சேவைகளிற்கான ஏறாவூர் இளங்கலை பட்டதாரிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந் நிகழ்வில் பல்கலைக்கழகம் சென்று கொண்டிருக்கும், செல்லவிருக்கும் மாணவர்களுக்கு துறைசார் வளவாளர்களைக் கொண்டு பல்கலைக்கழக கட்டமைப்பு மற்றும் இஸ்லாமிய கண்ணோட்டத்திலான பல்கலைக்கழக நுழைவு போன்ற இன்னோரன்ன விடயங்கள் தொடர்பான தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டதோடு இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஷ ிப்லி அவர்களால் தற்போதைய தொழில் வான்மையுள்ள உலகத் தேவைகள் மற்றும் இளங்கலை பட்டதாரிகளுக்குத் தேவையான அத்தியாவசிய திறன்கள் தொடர்பான பெறுமதியான ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

மேலும் உள்ளூராராட்சி உதவி ஆணையாளர் அல் அமீன், கூட்டாக இணைந்து ஒரு சிறந்த தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான சக்திவாய்ந்த உரையை ஆற்றியதோடு அகில இலங்கை ஜம்இயதுல் உலமா சபை ஏறாவூர் கிளையின் தலைவர் அஸ் ஷெய்ஹ் ஏ.எல். ஸாஜித் ஹூஸை ன் (பாகவி) சமூகங்களுக்கிடையில் ஒற்றுமையை வலியுறுத்தி, பல்கலைக்கழக மாணவர்களுக்கு அவசியமான ஆன்மீக சொற்பொழிவு ஒன்றினையும் வழங்கியிருந்தமை சிறப்பம்சமாகும்.

தேசிய கீதத்துடன் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களால் வரவேற்பு கீதம் இசைக்கப்பட்டதோடு பேண்ட் வாத்திய குழுவினரின் பங்கேற்பு, கவிதை, பாடல்கள் என மாணவர்களின் பல்வேறு திறன்கள் மேடையேற்றப்பட்டன.

இந்நிகழ்வின் போது 2021/2022 மற்றும் 2022/2023ஆம் கல்வி ஆண்டில் அரச பல்கலைக்கழகங்களுக்கு உள்வாரியாகத் தெரிவு செய்யப்பட்ட 180ற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கான நினைவுச்சின்னங்கள் வழங்கி வைக்கி கௌரவிக்கப்பட்டதோடு வினா விடைகள் போட்டி நிகழ்வில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

**வாசகர்களே!**

உங்கள் பிரதேசத்தில் இடம்பெறவுள்ள விழாக்கள், பாடசாலை நிகழ்வுகள், பாடசாலை அறிமுகம், அரச, தனியார் விழாக்கள் மற்றும் அவிபிருத்தி திட்டங்கள், கலாசார நிகழ்வுகள், மத நிகழ்வுகள் எதுவாயினும் எமது பத்திரிகை ஊடாக முழுப் பக்கத்தில் பிரசுரிக்க முடியும்.

அவ்வாறு தேவையுடையோர் 071 89 666 13 எனும் இலக்கத்திற்கு அழைக்கவும்!

உதயம்



## நானா நீயா அவனா ?



சபீர் மொஹமட்

# என் பெயரிலும் ஒரு விகாரை வேண்டும் !!

இப்போது காணப்படுகின்ற புதிய ட்ரெண்ட் அழகான மலை உச்சிகளில் விகாரைகளை கட்டுவதாகும். தொல்பொருள் சின்னங்களையும் பௌத்த தொன்மை வாய்ந்த விகாரைகளை மீண்டும் கட்டி எழுப்புவதாகவும் அவற்றை பாதுகாப்பதாகவும் கூறியே குறித்த புதிய விகாரைகள் ஆங்காங்கே கட்டப்படுகின்றன.

ஆகவே அந்தப் பட்டியலில் தற்போது முன்னாள் இருப்பது 'ககசிரிபுர தம்மாலோக தேரர்' ஆகும். கடந்த வாரம் பேஸ்புக்கில் இவர் தான் ஹீரோ. சிங்கம் போல் டிப்பர் ரவுண்டுக்கு மேலே தேசியக் கொடியை அசைத்த வண்ணம் பழைய தமிழ் படங்களில் ஹீரோ வருவது போல் இவருடைய பல வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வைரல் ஆகி வருகின்றன. இந்தத் தேரர் காப்பாற்றப் போவது "கவ்டாகல" மலை உச்சியில் காணப்படுகின்ற விகாரையை ஆகும்.

முதலில் தேரர் சமூக வலைத்தளங்களில் பணம் கேட்டு தன்னுடைய தனிப்பட்ட வங்கிக் கணக்கை பதிவு செய்கின்றார். குறித்த பதிவு இடப்பட்டு வெறுமனே 2 மணித்தியாலயத்திற்குள் 13 மில்லியன் ரூபாய் பணம் திரட்டப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் குறித்த தேரரின் அழைப்பை ஏற்று கடந்த பெப்ரவரி மாதம் 11ஆம் திகதி ஆயிரக்கணக்கான மக்கள் மண் கல் உட்பட தன்னால் இயன்ற கட்டட பொருட்களை கவுடாகல மலைக்கு எடுத்து வந்தார்கள். வெகு விமர்சையாக கட்டிட வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டன.

சமூக வலைத்தளங்களில் இது பற்றி மக்கள் இரு வேறு விதங்களில் தமது கருத்துக்களை வெளியிட்டு இருந்தமை இங்கே நோக்கத்தக்க விடயமாகும். ஒரு குழுவினர் நாட்டிலே இத்தனை தேவைகள் இருக்கும்போது எதற்காக இவ்வளவு பணத்தை விகாரை கட்டுவதற்காக செலவு செய்வதாக கேள்வி எழுப்பியிருந்தனர். குறிப்பாக வைத்தியசாலையில் மருந்துகள் இல்லை, உண்ண உணவில்லாமல் மக்கள் பட்டணியில் ஒருபுறம் சாகின்றார்கள் மறுபுறம் பாடசாலை மாணவர்கள் போசாக்கு குறைபாடு காரணமாக பாடசாலை செல்லாமல் வீடுகளிலே முடங்கி கிடக்கின்றார்கள். எனவே இது போன்ற ஒரு சூழ்நிலையில் எதற்காக கோடிக்கணக்கான பணத்தை கண்மூடித்தனமாக இவ்வாறு செலவு செய்வதாக கேள்வி எழுப்பியிருந்தனர்.

இதற்குத் தேரர் நேரடியாகவே பதிலும் கூறியிருந்தார். தனக்கு பணம் தருபவர்களின் பெயர் பட்டியலையும் கணக்கு விபரங்களையும் பேஸ்புக் வாயிலாக வெளியிட்டு இருந்தார். அதே சமயம் தேரருக்கு சார்பாக இன்னும் ஒரு சிலர் சமூக வலைத்தளங்களில் புதிய ஒரு உயஅியபைெ இனை செய்வதையும் அவதானிக்க முடிந்தது. அதிலே குறிப்பாக, தேரருக்கு பணம் கொடுக்க வேண்டாம் என்பது 'பௌத்த விரோதிகள், நாஸ்திகவாதிகள் அல்லது கிறிஸ்தவர்கள்' என பகிரங்கமாக சமூக வலைத்தளங்களில் பதிவுகள் இட்டிருந்தனர். இந்த அத்தனைக்கும் மத்தியில் தேரர் மேலும் கோடிக்கணக்கான பணத்தை பெற்றுக்கொண்டு தனது கனவு விகாரையை கட்டும் பணியை செய்து கொண்டிருக்கின்றார்.

இந்த சமூக வலைத்தள மாற்றங்களில் நோக்கப்பட வேண்டிய ஒரு சில விடயங்கள் காணப்படுகின்றன. சாதாரணமாக குறித்த தேரர் பணம் கேட்டிருந்தால் இது ஒரு சாதாரண விடயமாக காணப்பட்டிருக்கும். அது அவ்வளவாக மக்கள் மத்தியில் சென்றடைந்தும் இருக்காது. ஆனால் இங்கே பணம் கேட்கப்பட்டு, அது விமர்சிக்கப்பட்டு பின்னர் அங்கே ஒரு வெறுப்பு உருவாக்கப்பட்டு அதன் தூண்டுதலில் பலர் கோடிக்கணக்கான பணத்தை வழங்கினார்கள். அதுவே விளம்பரமாகவும் அமைந்தது.

இலங்கையில் தொல்பொருள் என்ற பெயரில் அபரிக்கப்படுகின்ற சிறுபான்மை மக்களுடைய முக்கால்வாசி காணிகளுக்கு நிகழ்ந்தது இதுதான். தமிழ் மக்கள் அல்லது முஸ்லிம் மக்கள் எங்களுடைய காணிகளை அபகரித்துள்ளார்கள் என்ற வெறுப்பினை அவர்கள் முதலில் சிங்கள சாதாரண மக்களுடைய மனதில் விதைக்கின்றார்கள். அதன்பின்னர் அந்த வெறுப்பின் ஊடாக அவர்களுடைய பணத்தையும் ஆள் பலத்தையும் பெற்று குறித்த நிலங்கள் அபரிக்கப்படுகின்றன. கூற கூரகல ஜெய்லானி முதல் குருந்தூர் மலை வரை அத்தனைக்கும் பின்னணியில் இருப்பது இந்த வெறுப்பு தான்.

அத்துடன் இந்த அத்தனை சம்பவங்களுக்கும் மத்தியில் தான் கடந்த வாரம் தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் அரச வர்த்தமானியின் ஊடாக தொல்லியல் சிறப்புமிக்க 11 வழிப்பாட்டுத் தலங்கள் புனித பூமியாக பெயரிடப்பட்டன. திருக்கோணமலை கூச்சவெளி அம்பாறை பொத்துவில் போன்ற தமிழ் மக்கள் பரவலாக வாழ்கின்ற பல இடங்களிலும் நிலங்கள் புனித பூமியாக தற்போது அரச வர்த்தமானியில் பெயரிடப்பட்டுள்ளன.

எனவே இது எதுவும் எதார்த்தமாக நடைபெறுபவை அல்ல என்பதை சிறுபான்மை நாங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். இலங்கையில் தொல்பொருள் சட்டம் என்று ஒன்று காணப்படுவதும் அதன் கீழ் பிணை இன்றி கைது செய்யலாம் என்பதெல்லாம் பழைய கதை. ஏனென்றால் தொல்பொருள் சட்டத்திற்கு அமைவாக எந்த ஒரு தொல்பொருள் பெருமதி வாய்ந்த இடத்திலும் புதிதாக குறித்த தொல்பொருள் சின்னங்களுக்கு பாதிப்பு விளைவிக்கும் விதத்தில் கட்டிடங்களை கட்ட முடியாது. ஆனால் இங்கே தொடர்ந்து புதிய புதிய விகாரைகள் கட்டப்பட்டு தான் வருகின்றன. அதேபோல் தொல்பொருள் என்பது ஒரு நாட்டுக்கு உரிய சொத்து மாறாக அது ஒரு மதத்திற்கு உரிய சொத்து அல்ல. ஆனால் இந்த அத்தனை சட்டங்களில் இருந்து இலங்கையில் தேரர்கள் விதிவிலக்கு பெற்றவர்கள் ஆகும்.







# வெற்றியின் இரகசியம் முயற்சி!

## டாக்டர் வெள்ளம் ஜீ இக்பால் உற்சாகக் கருத்து!



கியாஸ் ஏ. புஹாரி

**இந்தியா தஞ்சாவூரைச் சேர்ந்த பிரபல தொழிலதிபர் வெள்ளம் ஜீ. டாக்டர் எம்.ஜே. இக்பால். இவர் தன்னை வெளியுலகத்துக்கு அடையாளப்படுத்த விரும்பாத பிரமுகராகவும், தனது கல்விப் பரப்பில் ஆரவாரமின்றி உச்சம் தொட்டு இன்று துபாய் நாட்டில் "மிட்சுபிஸி" நிறுவனத்தின் பணிப்பாளராகவும், ஜப்பான் வரை விசாலித்திருக்கும் தனது நிறுவனத்தின் உச்ச அடைவைக் கண்டவருமாவார்.**

**அவர், அண்மையில் நிகழ்வொன்றுக்காக இலங்கைக்கு வருகை தந்திருந்த போது "உதயம்" பத்திரிகைக்காக வழங்கிய நேர்காணல் இது:**

**கேள்வி: உங்களது இளவயது முயற்சியின் தூண்டுகோள் என்ன?**

பதில்: எனக்கு, எப்போதுமே முயற்சியும், தியாகமும் ரொம்ப பிடித்ததாகும். எனது 22ஆவது வயதில் நான் பல்கலைக்கழகத்தில் MBA மேற்படிப்பு கற்றுக்கொண்டிருக்கும் போது Emirats Trading Agency இனால் தொழிலுக்கான நேர்முகத் தேர்வுக்கு கடிதம் கிடைத்தது. அப்போது குறித்த நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டிருந்தேன். நூற்றுக் கணக்கோர் பங்கேற்ற அந்த தேர்வில் எனது நேரம் நெருங்கியதும் சான்றிதழ்கள், கல்வித் தகைமைகளை பார்த்துவிட்டு "உங்களுடைய தற்போதைய கல்வியளவு இப்பொழுது கொடுக்கப்படும் தொழிலுக்கு அதிக தகைமையாக உள்ளது. எனவே, நீங்கள் இவ் வேலையில் இணைவதாயின் இந் நிலையிலேயே உங்களை மட்டுப்படுத்திக்கொள்ளுங்கள்" என்றார்கள். என்ன செய்வதென்று அறியாமல் திணறிவிட்டு, தீர்க்கமான முடிவின் பின்னர் துபாயிலுள்ள ஜப்பான் "மிட்சுபிஸி" கம்பனியில் இணைந்து கொண்டேன்.

பின்னர் படிப்படியான விடா முயற்சியின் பலனாக 2007 இல் அதே நிறுவனத்தில் நிறைவேற்று அதிகாரியாகவும் பின்னர் 2011 இல் மத்திய கிழக்கு மற்றும் துபாயிலுள்ள நிறுவனத்துக்கு பணிப்பாளருமானேன்.

**கேள்வி: பலமுறை இலங்கை விஜயம் செய்துள்ள உங்களின் தற்போதைய பயணத்தினூடாக இலங்கையில் நீங்கள் காணும் மாற்றங்கள் என்ன?**

பதில்: இலங்கை உண்மையிலேயே ஒரு வளம் நிறைந்த பசுமையான அழகிய நாடு, இலங்கைக்கும் எமக்கும் எப்போதுமே நல்லுறவுகள் அதிகம். எமது பாட்டானார்கள் எல்லாம் இலங்கையில் வர்த்தகம் செய்துள்ளார்கள். பொதுவாக இலங்கையென்றாலே எமக்கு பெரும் சந்தோஷம்.

1993 இலிருந்து ஒவ்வொரு வருடமும் ஒருமுறையேனும் இலங்கை வருவேன். இடைப்பட்ட காலத்தில் கோவிட் – 19 கெடுபிடியினால் வெளிநாட்டு பயணங்களை குறைத்திருந்தேன். மீண்டும் பல நாட்களுக்குப் பிறகு இம்முறை வந்ததில் பல வித்தியாசங்களை உணரக் கூடியதாக உள்ளன.

அதாவது, இங்குள்ள வீதி அமைப்புக்கள், குறிப்பாக நெடுஞ்சாலை வீதிப் போக்குவரத்து மற்றும் புதிய புதிய ஹோட்டல்கள், விடுதிகள் என ஏராளமான அபிவிருத்திகள் இடம்பெற்றுள்ளமையை பார்க்கும்போது மனது கலந்த மகிழ்ச்சி பொங்குகிறது.

இவ்வாறான அபிவிருத்திகள் 1993 ஆம் ஆண்டு முதல் தடவையாக வருகை தந்தமைக்கும் இப்போது 2024 ல் வருகைதந்துள்ளமைக்கும் பாரிய வித்தியாசங்களை உணரக்கூடியதாக அமைந்துள்ளது.

பொதுவாக எனது ஒவ்வொரு பயணத்தின் போதும் வெலிகம சென்று சங்கைமிகு கலீல் அவுன் மௌலானா அவர்களை தரிசிப்பது வழக்கம். அந்த சந்தர்ப்பத்தில் கொழும்பிலிருந்து வெலிகம செல்வதற்கு சுமார் மூன்றரை மணித்தியாலங்கள் தேவைப்படுகின்ற போதிலும் தற்போது இவ்வாறான வீதி அபிவிருத்திகளால் வெறும் ஒன்றரை மணி நேரத்தில் சென்று வரக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளதென்பது சிறப்பானதொரு விடயமாகும்.

**கேள்வி: சங்கைமிகு கலீல் அவுன் மௌலானாவின் நினைவாக இந்தப் பயணம் மேற்கொண்டதாக குறிப்பிட்டீர்கள் அவரைப் பற்றி கூற முடியுமா?**

பதில்: நீங்கள் சங்கைமிகு அவுன் மௌலானா அவர்களைப் பற்றி கூறுங்கள் என்றால். "எனக்கு அவர் பற்றி தெரியாது" என்றுதான் சொல்ல வேண்டும்.

ஏனென்றால் அந்தளவு பெரும் அறிவுஞானம் பெற்றவர். அதனால் கூறுகிறேன் அவரைப் பற்றி முழுமையாக சொல்லி முடிக்க முடியாது. இருந்தாலும் நான் அறிந்த பலவற்றின் அடிப்படையில் சிலதை கூறுகின்றேன்.

அவரின் சிறப்பு என்று சொல்லப் போனால், அவருடைய அறிவு என்னை பிரமிக்க வைக்கிறது. காப்பியக்கோ ஜின்னா ஷரிபுத்தீன் என்னிடம் கூறினார். தமிழ் மொழியில் அவ்வளவு பெரிய ஆற்றலைக் கொண்டவர் அவுன் மௌலானா அவருடைய புலமை மறைவின் பின்னர்தான் தெரியவந்தது. அதற்கு அதை வெளியுலகில் காண்பித்து இப்படியானதொரு முத்தை அடையாளம் காணாமை எமது நாட்டின் துரதிஷ்டம் என்றுதான் கூற வேண்டும் என்றார்.

அது மாத்திரமல்லாமல் அவருடைய கற்கை நிலையத்தில் பல விடயங்களை பலருக்கும் சொல்லிக் கொடுத்துள்ளார்கள். இன்று அவர்களில் பலரும் பல துறைகளில் சாதித்துக் கொண்டிருக்கின்றனர். அவருடைய வெண்பா கவி, சித்திரக் கவி, நாக பந்தம் இவைகள் உலகளவில் பேசப்படக்கூடிய தமிழ் புலமை வாய்ந்தவைகள். இவைகள் அவருடைய தமிழ் ஆளுமைகள்.

சங்கைக்குரிய அவுன் மௌலானா அவர்களைப் பற்றி சொல்வதானால், 1983 ம் ஆண்டிலிருந்து நான் அருடைய மாணவனாக இருக்கின்றேன். அவரிடம் எப்போது ஒரு மாணவனாக சேர்ந்தேனோ அன்றிலிருந்து என்னுடைய வாழ்வில் பல மாற்றங்களை நான் உணர்ந்தேன்.

அவர்களுடைய போதனை மிகப் பிரதானமானதும், எனக்கு ரொம்ப பிடித்ததும், நான் கடைப்பிடிப்பதும் என்னவென்றால்,

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் அவர்களுடைய குடும்பம் மீதும் அதிகம் நேசம் வைத்தல், நபியவர்கள் எதனையெல்லாம் சொல்லிக் கொடுத்தார்களோ அவற்றையெல்லாம் முறையாகச் செய்தல்.

அதற்கு பொதுவாக 5 விடயங்களை கடைப்பிடித்தல்,

1. ஐவேளை தொழுகையை முறையாக கடைப்பிடித்தல்.
2. சுபஹ் தொழுகையை விடாமல் தொழுது வரல்.
3. ஒவ்வொரு தொழுகையின் பின்னரும் குர்ஆன் ஓதுதல். குறைந்தது ஒரு ஐன் ஆவது ஓதுதல்.
4. ஒவ்வொரு மாதத்திலுமுள்ள முழு சந்திர நாளில் அனைத்து குடும்ப உறுப்பினர்களையும் இணைத்து குர்ஆன், திக்ர் மஜ்லிஸ் நடாத்தல்.
5. மனிதன் எப்படி வாழவேண்டும். இதைத்தான் நபியவர்கள் சொல்லிக் கொடுத்தார்கள். இன மத வேறுபாடுகளுக்கு அப்பால் மனிதன் மனிதத்தன்மையாக வாழ்தல்.

இவ்வாறு பல்வேறு அறிவாற்றல்களை கொண்டவர்தான் மர்ஹூம் சங்கைமிகு அவுன் மௌலானா அவர்கள்.

**கேள்வி: தொழில் நிலைகளில் தங்களது முன்னேற்றங்களில் நீங்கள் கையாண்ட உத்திகள் யாவை?**

பதில்: நான் எப்போதும் தொழில் கடமைகளின் போது, அதனை ஒரு வணக்கமாக எடுத்து, கண்ணியத்துடன் செய்ய ஆரம்பிப்பேன். அதுதான் வெற்றியின் இரகசியமாகவும் அமையும்.

ஒருவர் வைத்தியராக இருக்கட்டும் அல்லது வக்கீலாக இருக்கட்டும் அல்லது பொறியியலாளராகவோ அல்லது ஆசிரியராகவோ எதுவாக இருப்பினும் தன் தொழிலை நேர்த்தியாகவும் நேர்மையாகவும் செய்வதன் மூலமே வெற்றியின் உச்சத்தை தொட முடியும்.

அது மட்டுமல்ல வாழ்க்கையில் நேர முகாமைத்துவத்தை சரிவர செய்வதன் மூலம் மாத்திரமே வெற்றியின் அருகிலாவது செல்வது சாத்தியம்.

ஆகையால், உண்மை, நேர்மை, நம்பிக்கை, நேரமுகாமைத்துவம், மத அனுஷ்டானங்கள் இவைகள் எப்போதும் வெற்றியை கொண்டு வந்து சேர்க்கும்.

**கேள்வி: இன்றைய இளைஞர்கள் தொழில் நிமித்தம் பல தடுமாற்றங்களை உணர்கிறார்கள் அவர்களுக்கு நீங்கள் கூற முனைவது என்ன?**

பதில்: இது ஒரு நல்ல வினா! அதே நேரம் முக்கியமான விடயம். எப்போது "முடியாது" என்கிற வார்த்தையை மனதில் எடுக்கிறோமோ அன்றுதான் தமது தோல்வி நிர்ணயிக்கப்படுகின்றது. அதாவது, அவர்கள் எப்போதும் அயாராது முயற்சிக்க வேண்டும். எந்தவொரு திறமையானாலும் அவற்றை சந்தேகிக்க கூடாது. திறமைகளின் அளவை மட்டுப்படுத்தக் கூடாது. சவால்கள்தான் ஒரு மனிதனை நல்ல நிலைக்கு இட்டுச் செல்லும்.

இப்போதுள்ள சந்ததியினர் மிகவும் கவனக் குறைவானவர்களாகவே உள்ளனர். அவர்களது இலக்கு ஒருபுறமிருக்க நகர்வு இன்னொரு புறமிருக்கும். சுய தேடல் குறைந்தவர்களாக நகர்கின்றனர். இவைகளெல்லாம் சமூக ஊடகங்கள் மற்றும் இதர புதிய சாதனங்களில் பாவனைகளில் மூழ்குவதால் ஏற்படும் விளைவுகளாகும்.

எப்போது, சரியான இலக்குடனும், தூரநோக்கான சிந்தனையுடனும் பயணிக்கின்றார்களோ அன்றுதான் வெற்றியின் அத்திவாரத்தைத் தொட முடியும்.

ஆகையால், சாதிக்க நினைக்கும் ஒவ்வொருவரும் வயது வித்தியாசமின்றி தங்களது திறமைகளை தீட்ட வேண்டும். அப்போதுதான் வெற்றி தேடி வரும்.

எனக்கு 1985 இல் துபாயில் வேலை கிடைக்கும் போது அங்கு 164 பேருக்கு நேர்முகத் தேர்வு இடம்பெற்றது. அதில் 40 பேர் தெரிவு செய்யப்பட்டனர். அதில் இரண்டாவது நபராக தெரிவு செய்யபட எனக்கு இறைவன் அருள்பாலித்தான். துபாய் சென்று மிகவும் குறுகிய காலத்தில் அதாவது 5 வருடங்களுக்குள் அதே கம்பனியில் முகாமையாளர் ஆனேன். 8 வருடங்களில் திட்டமிடல் பணிப்பாளர்! அதனோடே சுய முயற்சியை கைவிடாது பயணித்து 2007 இல் Toshiba Elevator எனும் சொந்த நிறுவனத்தை ஆரம்பித்தேன். இது எனது ஒரே பார்வையிலான இலக்கும், விடா முயற்சிக்கும் கிடைத்த சான்றாகும்.

பின்னர் மத்திய கிழக்கு முழுவதும் விநியோகம் இடம்பெற்றது. தொடர்ந்து ஜப்பானிலும் வியாபார விஸ்தரிப்பை மேற்கொண்டோம்.

இதற்கு முக்கிய காரணமாக கருதக்கூடியவை ஒழுக்கம், முயற்சி, காலம் தவறாமை போன்றனவாகும். உதாரணமாக சில வேளை இந்த வேலை கிடைக்காது போகும் என அந்த தருணத்தை தவறவிட்டிருந்தால் இன்று இந்த நிலை கேள்விக் குறியாகி இருக்கலாம். இவைகளை ஒரு பெரிய வழிகாட்டியாகத்தான் நான் பார்க்கிறேன்.

குறிப்பாக இலங்கையிலுள்ளவர்கள் எவ்வாறு பார்க்கிறார்கள் என தெரியவில்லை. இலங்கை மிகவும் வளம் பொருந்திய நாடு. இந்த நாட்டிலேயே பல வளங்கள் உள்ளன. அவற்றை சரியாக பயன்படுத்தினால் இங்குள்ள இளைஞர்கள் பலரும் உச்சம் தொட்டு பலருக்கான வேலை வாய்ப்புக்களை உருவாக்கிக்கொள்ள முடியும்.

எனவே, இங்கு மட்டுமல்ல உலகிலுள்ள அத்தனை நாடுகளிலும் எத்தனையோ வளங்கள் எமக்கு சாதகமாக இருந்தாலும் அவற்றை விடா முயற்சியினாலும், தீர்க்கமான குறிக்கோளினாலும் மட்டுமே அடைய முடியும்.

***






# அபுதாபியில் இந்து கோயில்.. இந்திய முஸ்லிம்களுக்கான செய்தி என்ன?



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

அபுதாபியில் இந்து கோயில் திறந்து வைக்கப்பட்டது பொன்னான அத்தியாயம் என கோயிலை திறந்து வைத்த பின் இந்திய பிரதமர் மோடி பேசினார். இந்திய பிரதமர் மோடி அபுதாபியில் கட்டப்பட்டுள்ள பிரமாண்ட சுவாமி நாராயணன் இந்து கோயிலை இன்று திறந்து வைத்தார். பின் இவ்வாறு பேசினார் என்பது குறிப்பிடத்தக்கது.

பல வருடங்கள் கடினமான உழைப்புக்கு பின் இந்து கோயில் திறந்து வைக்கப்பட்டுள்ளது பொன்னான அத்தியாயம். இங்கு புர்ஜ் கலிபா, பியூச்சர் மியூசியம், ஷேக் சயீத் மசூதி மற்றும் பிற ஹைடெக் கட்டிடங்களுக்கு பெயர் பெற்ற ஐக்கிய அரபு அமீரகத்தில் தற்போது திறக்கப்பட்டுள்ள மற்றொரு கலாச்சார அத்தியாயத்தில் பாப்ஸ் இந்து கோயில் சேர்ந்துள்ளது. வரும் காலங்களில் ஏராளமான பக்தர்கள் இங்கு வருவார்கள் என்று நான் நம்புகிறேன். இதன் மூலம் ஐக்கிய அரபு எமிரேட்சுக்கு வருபவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும்.

உலகம் முழுவதும் வாழும் இந்தியர்கள், மற்றும் லட்சக்கணக்கானோர் சார்பில் யு.ஏ.இ., அதிபர் முகமது பின் சயீத் அல் நஹ்யான் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அரசுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று இந்திய பிரதமர் நரேந்திர மோடி பேசினார்.

இந்திய மதிப்பில் சுமார் 800 கோடி ரூபாய் செலவில் 26 ஏக்கர் நிலப்பரப்பில் இந்த கோவில் கட்டப்பட்டுள்ளது. கோயிலில் மொத்தம் 7 கோபுரங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. நிலநடுக்கம், மற்றும் அதீத வெப்பத்தினால் கோயில் பாதிக்கப்படாமல் இருக்க 100 சென்சார்கள் கோயிலுக்கு அடியில் பொருத்தப்பட்டிருக்கிறது. இக்கோயில் மொத்தமாக 400 மில்லியன் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் திர்ஹாம் செலவில் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது.

2019இல் இந்த கோவிலுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. கோவிலின் சுவர்களில் உள்ள அழகிய சிற்பங்கள் ராமாயணம், சிவபுராணம் மற்றும் ஜகன்னாதர் யாத்திரையின் கதைகளைச் சித்தரிக்கின்றன. கங்கை, யமுனை மற்றும் சரஸ்வதி நதிகள் சங்கமிக்கும் இடமும் இந்த கோவிலில் சித்தரிக்கப்பட்டுள்ளது. அதாவது பல நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களை செலவழித்து கட்டப்பட்டுள்ள இந்த கோவில் உட்புறம் பல்வேறு தொழில் நுட்ப வசதிகள் சென்சார்கள் அமைந்துள்ளது.அபுதாபியில் கட்டப்பட்டுள்ள கோவில் அரபு உலகின் முதல் இந்து கோவில் அல்ல. ஐக்கிய அரபு எமிரேட்ஸில் (யுஏஇ) மட்டுமின்றி ஓமன் மற்றும் பஹ்ரைனிலும் பல தசாப்தங்களாக கோவில்கள் உள்ளன.ஓமன் நாட்டின் தலைநகரான மஸ்கட்டில் இரண்டு இந்து கோவில்கள் உள்ளன. மஸ்கட்டின் ரூவியில் கிருஷ்ணா-விஷ்ணு கோவில் உள்ளது. இந்த கோயில் 150 ஆண்டுகள் பழமையானது என கூறப்படுகிறது. ஓமனில் குடியேறிய குஜராத்தி சமூகத்தின் நட்பின் அடையாளமாக ஓமன் சுல்தானால் இந்தக் கோவில் கட்டப்பட்டது. அதேநேரத்தில் துபாயின் செழிப்பான இந்திய சமூகம், அனைத்து முக்கிய மதங்களையும் உள்ளடக்கியது. பல தசாப்தங்களாக இந்தச் மக்களுக்கான வழிபாட்டுத் தலங்கள் இருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் உண்மையில் மோடி ஆட்சியில் முஸ்லிம்கள் மிகுந்த துயரத்தை சந்தித்து வருகின்றனர் என்பதே உண்மையாகும்.. வட இந்திய மாநிலங்களில் முஸ்லிம்களின் மசூதிகள் மற்றும் மதரஸாக்கள் என்று அனைத்தும் குறி வைத்து தகர்க்கப்படுகிறது.

வட இந்திய மாநிலங்களில் ஒன்றான உத்ராஞ்சல் மாநிலத்தில் பாஜகவின் ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்த மாநிலத்தின் முதல்வர் தாமி இந்திய வரலாற்றில் முதன் முதலாக பொது சிவில் சட்டத்தை அந்த மாநிலத்தில் தாக்கல் செய்து இருக்கிறார். இந்த சட்டத்தின் மூலம் முஸ்லிம்களின் தனியார் சட்டமான ஷரியா சட்டத்தை இந்தியாவில் முஸ்லிம்கள் பின்பற்ற முடியாத சூழ்நிலையை மோடி அரசு தனது பாஜக ஆட்சி செய்யும் உத்ராஞ்சல் மாநிலத்தில் அமல்படுத்த முனைந்து உள்ளது. இந்த சட்டத்தின் மூலம் இந்தியாவில் வாழும் முஸ்லிம்களின் மொத்த உரிமைகளை பறிக்கும் வகையில் அதுவும் இந்து மதம் சார்ந்த சட்டங்களை முஸ்லிம்கள் இனி பின்பற்ற வேண்டிய நிர்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டு விட்டதாக சட்ட தரணிகள் மற்றும் சட்ட வல்லுனர்கள் கருத்து தெரிவித்து உள்ளார்கள். அதாவது 1925 , 1955, ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட இந்து மத சட்டத்தை முழுமையாக நகல் எடுத்து அந்த சட்டத்தை தான் மோடி அரசு புதிய சட்ட வடிவாக அமல்படுத்த இருக்கிறது.. அதாவது இது தான் பொது சிவில் சட்டம் என்று பித்தலாட்டம் செய்கிறது. இதன் மூலம் இந்தியாவில் நாடு முழுவதும் பொது சிவில் சட்டத்தை அமல்படுத்த முடியும் என்று மோடி மற்றும் அவர்களின் தாய் அமைப்பான ஆர் எஸ் எஸ் நம்புகிறது..முஸ்ம்கள் இனி இந்த சட்டத்தை தான் பின்பற்றி நடக்க வேண்டும் என்று மோடி அரசு கூறியுள்ளது. மோடியின் தலைமையில் ஆன இந்துத்துவ கடும்போக்குவாத அரசு இந்தியாவில் வாழும் இந்து பொதுமக்களிடம் இஸ்லாமிய சித்தாந்தம் மற்றும் முஸ்லிம்களின் வாழ்வியல் குறித்து தவறான கருத்துக்களை பரப்பி வருகின்றனர். இதன் மூலம் மோடி மற்றும் அவரது ராஜ்ய பிரதிநிதிகள் தாங்கள் மட்டுமே இந்தியாவையும், இந்துக்களின் பாதுகாப்பையும் உறுதிபடுத்த முடியும் என்று பிரச்சாரம் செய்து வருகின்றனர் . உங்களுக்கு புரியும் பாஷையில் கூறுவது என்னவென்றால் மோடி ஒரு சர்வதேச சூப்பர்மேன் என்கிற அளவில் மாய பிம்பம் கட்டமைப்பு செய்யப்படுகிறது.

அதே நிலையில், தென்னிந்தியாவில் வாழும் மக்கள் எந்தவொரு நிலையிலும் மோடி மற்றும் ஆர் எஸ் எஸ் அமைப்பின் தவறான பிரச்சாரத்தினை நம்ப மறுக்கின்ற நிலையில் தமிழ் நாடு உட்பட எந்த மாநிலத்திலும் அவர்கள் கால்பதிக்க முடியாத அளவிற்கு மிக கடுமையான சிக்கலை சந்தித்து வருகின்றனர். அதனால் தான் மத்தியில் பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றியதிலிருந்து முஸ்லிம்கள் மீதான வெறுப்பு அரசியலை பாஜக அரசு கட்டவிழ்த்து வருகிறது. இந்தியா வகுப்புவாத பிரச்சினைகளை அதிக அளவில் சந்தித்து வருகிறது.

இஸ்லாமியர்களுக்கு எதிரான வன்மமான பேச்சுக்களை பாஜக தலைவர்கள், அமைச்சர்கள் வெளிப்படையாகவே பேசி வருகின்றனர். பாஜகவும் அதன் தாய் அமைப்பான சங்பரிவாரங்களும் இந்தியாவின் மதச்சார்பின்மைக்கு எதிரான கருத்தியலைக் கட்டமைப்பதில் முனைப்புக் காட்டி வருகின்றன. குறிப்பாக பாஜக பெரும்பான்மையாக வெற்றி பெற்றுள்ள மாநிலங்களில் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்து வருகிறது.

அதேநேரத்தில் வருகின்ற 2024 ம் ஆண்டு மே மாதம் இந்தியாவில் தேசிய பொதுத் தேர்தல் நடைபெற உள்ளது. இந்தியாவில் தற்போதைய நிலையில் வேலை வாய்ப்பு மற்றும் பொருளாதார நெருக்கடியால் இந்தியா பல்வேறு விதமான சிக்கலை எதிர் கொண்டு வருகிறது. 2014 ம் ஆண்டு மோடி ஆட்சிக்கு வரும் முன்பாக இருந்த இந்திய பொருளாதாரம் காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்ததை விட எல்லா மட்டங்களிலும் பின்னடைவை சந்தித்து வருகிறது. இதனை மடை மாற்றம் செய்யவேண்டும் என்று மோடி மற்றும் ஆர் எஸ் எஸ் தலைமையில் ஆன இந்துத்துவ அமைப்புகள் திட்டமிட்டு தற்போது உத்திர பிரதேசம் மாநிலத்தில் ராமருக்கு கோயில் கட்டி பிரதிஷ்டை செய்து விட்டனர். 500 ஆண்டுகளாக மஸ்ஜித் இருந்த இடத்தில் பள்ளி வாசலை முழுமையாக தகர்த்து எறிந்து விட்டு அங்கே தான் ராமருக்கு கோயில் காட்டியிருப்பது ஒட்டு மொத்த முஸ்லிம் சமூகத்தை முழுமையாக வேதனையில் ஆழ்த்தி விட்டது.

இந்த கோயில் பிரதிஷ்டை நடந்த போது இந்தியா முழுவதும் மோடி பூசை செய்யும் காட்சி தொலைக்காட்சிகள் மூலம் தொடர்ந்து ஒலிபரப்பு செய்யப்பட்டது. ஒரு மதசார்பற்ற தேசத்தின் பிரதமர் ஒரு மதத்திற்கு தலைமை ஏற்று பூசை செய்யலாமா என்கிற கேள்விக்கு இதுவரையில் எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை என்பதே உண்மையாகும்.

இந்தியா முழுவதும் சினிமா பிரபலங்கள், தொழில் துறை பிரபலங்கள் என்று அனைவரும் அழைக்கப்பட்டு ராமர் கோயில் பிரதிஷ்டை நடந்து முடிந்தது.இதன் மூலம் மோடி தான் பாபர் மசூதியில் கோயில் கட்ட காரணமாக இருந்தார் என்று இந்து வாக்கு வங்கியை உருவாக்க அவர் முனைவதாக இந்திய தேசிய காங்கிரஸ் உட்பட அனைத்து எதிர் கட்சி தலைவர்களும் இந்த திறப்பு விழா நிகழ்ச்சியை புறக்கணிப்பு செய்து விட்டனர்.

இரண்டாவது உத்திரப் பிரதேசம் மாநிலத்தில் வாரணாசியின் உள்ள ஞானவாபி மசூதி வளாகத்தில் ஆய்வு நடத்திய இந்திய தொல்லியல் துறையினர் (ஏ.எஸ்.ஐ.), அங்கு மசூதி கட்டப்படுவதற்கு முன்பு, இந்து கோவில் ஒன்று இருந்ததாகக் கூறியுள்ளனர். இந்த பிரச்சினை நாடு முழுவதும் மிகுந்த சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் உத்தரப் பிரதேச மாநிலத்தின் பாஜக வின் முதல்வர் சாமியார்

யோகி ஆதித்யநாத் புதன்கிழமை சட்டமன்றத்தில் பேசியபோது தங்களுக்கு முஸ்லிம்கள் மேலும் மூன்று பள்ளிவாசல்களை இந்துக்கள் கோயில் கட்டி வழிபட விட்டு கொடுக்க வேண்டும் என்று பேசியுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.அதாவது அடுத்த கட்ட வன்முறை மற்றும் குழப்பத்திற்கு தான் இது வழி வகுக்கும் என்று நம்மால் புரிந்து கொள்ள கூடியதாக இது உள்ளது.

இந்தியாவில் முஸ்லிம்களை மிகுந்த துயரத்தில் ஆழ்த்தி விட்டு பாரத பிரதமர் இஸ்லாமியர்கள் பெரும்பாலான சமூகமாக வாழும் அபுதாபியில் உலகில் மிகப்பெரிய இந்து கோயிலை கட்டி திறந்து வைக்க முடிகிறது. அபுதாபியில் உள்ள அரபு ஷேக்குகள் இந்திய பிரதமரை கட்டி தழுவி வரவேற்பு கொடுத்தனர். இது போன்ற ஒரு நிகழ்வில் கலந்து கொண்டு பேச வேண்டும் என்றால் மனசாட்சியை அடகு வைத்து விட்டு தான் பேச வேண்டும். மோடி போன்ற அரசியல் தலைவர்கள் எந்தவொரு நிலையிலும் மனசாட்சி குறித்தெல்லாம் கொஞ்சம் கூட கவலைப்படுவதில்லை. அவருக்கு தேவை விளம்பரம் அதனால் கிடைக்கும் வாக்குகள் மட்டுமே (Hindu vote bank consolidation) என்பதில் எந்த ஒரு சந்தேகமும் இருக்க தேவையில்லை என்பதே உண்மையாகும்.

இந்தியாவில் முஸ்லிம்களுக்கு பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் போட்டியிட ஒரு எம்பி சீட் கூட கொடுப்பது இல்லை . இந்தியாவில் 25 கோடி மக்கள் தனித்து பெரும்பான்மை சமூகமாக வாழும் முஸ்லிம்களுக்கு இந்திய அமைச்சரவையில் ஒரு இடம் கூட மோடி அரசு ஒதுக்கீடு செய்வதில்லை. இந்தியாவில் முஸ்லிம்களை இரண்டாம் தர குடிமக்களாக நடத்தவே ஆர் எஸ் எஸ் அமைப்பு திட்டம் தீட்டி காய்களை மெல்ல, மெல்ல நகர்த்தி வருவதையும் நாம் தெளிவாக அவதானிக்க கூடியதாக இருக்கிறது. ஏனெனில் , அந்த அமைப்பில் பயிற்சி பெற்ற மாணவர் தான் தற்போது இந்தியாவின் பிரதமராக இருந்து வரும் மோடி என்பது எத்தனை பேருக்கு தெரியும் என்பது நமக்கு தெரியவில்லை.

1947 ம் ஆண்டு இந்திய, பாகிஸ்தான் பிரிவினையின் போது நடந்த மிகப் பெரிய கலவரத்தின் போது பல்லாயிரக்கணக்கான பொது மக்கள் இரண்டு தரப்பிலும் உயிர் இழந்து போனார்கள் . அந்த காலகட்டத்தில் வாழ்ந்த ஆர் எஸ் எஸ் அமைப்பின் பிதாமகன் சாவர்க்கர் எழுதிய நூலில் தான் இந்திய முஸ்லிம்களை இரண்டாம் தர குடிமக்களாக நடத்த வேண்டும் என்று தெளிவாக கூறியுள்ளார். அதாவது இந்திய முஸ்லிம்கள் இந்தியாவில் வாழும் உரிமை வழங்கும் இந்துத்துவ சனாதன அமைப்பான ஆர் எஸ் எஸ் இந்திய முஸ்லிம்களின் வாக்குரிமை மற்றும் அனைத்து விதமான ஜனநாயக வழியிலான உரிமைகளும் மறுக்க பட வேண்டும் என்று தெளிவுபடுத்தி விட்டது. இதன் அடிப்படையிலான கடும்போக்கு வாத சித்தாந்தத்தை முன்னெடுத்துச் செல்லும் நரேந்திர மோடியின் தலைமையிலான ஆட்சியில் முஸ்லிம்களுக்கு நீதி கிடைக்கும் என்பது எத்தனை மடமை தனம் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

இந்த நிலையில் தான் தொடர்ந்து இந்திய முஸ்லிம்களை குறிவைத்து தாக்குதலை தொடர்ந்து வரும் இந்து அமைப்புகள் 3,500 க்கு மேற்பட்ட பள்ளிவாசல்களை குறி வைத்து இந்து கோவில்களாக மாற்றி விடலாம் என்று திட்டம் தீட்டி செயல்பட்டு வருகின்றனர்.

இஸ்லாமிய அடிப்படை குர்ஆன் சட்டமான ஷரியா சட்டத்தை பின்பற்ற உரிமைகளை மறுக்கும் வகையில் பொது சிவில் சட்டம் அங்கு அமல்படுத்தப்பட வேண்டும் என்று இந்துத்துவ தீவிரவாதிகள் உரத்த குரல் எழுப்பி வருகின்றனர். அதேநேரத்தில், கர்நாடக மாநிலத்தில் இளம் முஸ்லிம் பெண்கள் பள்ளிக்கு செல்லும் போது தலையை மறைத்து ஹிஜாப் அணிந்து செல்ல தடை விதிக்க வேண்டும் என்று இந்துத்துவ அமைப்புகள் போரட்டத்தில் ஈடுபட்டு வந்தது சர்வதேச அளவில் மிகப் பெரிய செய்தியாக மாறியது.

அதனைத் தொடர்ந்து பரம்பரை பரம்பரையாக இந்து கோவில்களை சுற்றி கடை வைத்து பிழைப்பு நடத்தி வரும் முஸ்லிம்கள் கடைகளை காலி செய்ய வேண்டும் என்றும், இந்துக்களை தவிர பிற சமூகத்தினர் கடைகள் வைக்க அனுமதி இல்லை என்று பல்வேறு மாநிலங்களில் சட்டங்களை கொண்டு வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

தற்போதைய நிலையில் வட இந்தியாவில் உள்ள உத்ராஞ்சல் மாநிலம் முஸ்லிம்கள் இல்லாத மாநிலமாக மாற்றப்பட வேண்டும் என்று வெளிப்படையாக இந்துத்துவ சிந்தனைவாதிகள் குரல் எழுப்பி வருவது மட்டுமின்றி ஆங்காங்கே உத்ராஞ்சல் மாநிலத்தில் ஃபோர்டு வைக்கப்பட்டுள்ளதாக அண்மையில் செய்திகள் வெளியாகியுள்ளன. இது போன்ற செய்திகள் உண்மையில் பலருக்கு மிகுந்த அதிர்ச்சி மற்றும் அச்சத்தை ஏற்படுத்தியது என்றால் மிகையாகாது.

மோடி அரசு இந்தியாவில் நீதிமன்றங்கள் மூலம் தங்களுக்கு சாதகமான தீர்ப்பை பெற்று விடுவதாக தொடர்ந்து எல்லா வகையிலும் எதிர் கட்சிகள் குரல் எழுப்பி வருகின்றனர்.

எந்தவொரு ஆதாரமும் இல்லாமல் தான் பாபர் மசூதி இருந்த இடத்தில் ராமர் கோயில் இருந்ததாக தவறான பொய்யை பரப்பி தீர்ப்பை மோடி அரசு தனக்கு சார்பாக பெற்று கொண்டதா எதிர் குரல்கள் தொடர்ந்து எதிரொலிக்கிறது.



காஷ்மீர் மாநிலத்தில் 370 சட்ட பிரிவு மூலம் அங்கு வாழும் பெரும்பாலான முஸ்லிம்கள் சலுகைகள் பெற்று வருவதாக தவறான தகவல்களை பரப்பி அந்த சட்டத்தை அண்மையில் ரத்து செய்தது மட்டுமல்லாமல் பல்வேறு தலைவர்களை வீட்டு காவலில் அடைத்தது மோடி அரசு என்பதை நாம் காண முடிந்தது.

பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் நாடு முழுவதும் தவறான பிரச்சாரங்கள் மட்டுமே முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. வட இந்தியாவில் வாழும் பெரும்பாலான இந்துக்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் தான் தொடர்ந்து பாரதிய ஜனதா கட்சிக்கும் வாக்களித்து வருகின்றனர்.

நாட்டை ஆளும் எந்தவொரு அரசியல் கட்சியும் பொருளாதாரம், கல்வி, தொழில்நுட்ப அறிவு, சுகாதாரம் மற்றும் வளர்ச்சி சார்ந்த அரசியலை முன்னெடுத்துச் செல்வதில் பெருங் கவனம் செலுத்தி வெற்றி பெற வேண்டும் . மாறாக இந்தியாவில் மதம் மற்றும் இன வெறுப்பு மூலம் மக்கள் பிரிவினைக்கு உட்படுத்தப்பட்டு வரும் சூழல் காணப்படுகிறது . இந்தியாவில் முஸ்லிம்களை நீக்கி விட்டு வளர்ச்சி என்பது கற்பனைக்கு அப்பாற்பட்ட ஒன்றாகவே இருக்கிறது. இந்தியாவில் வாழும் பெரும்பாலான இந்துக்கள் கூட மோடி தலைமையிலான இந்து தேசியவாத அரசுக்கு முழுமையாக ஆதரவை வழங்கவில்லை . அதன் விளைவாக சில கட்சிகளுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்ட பாரதிய ஜனதா அரசு முழுமையாக 38 மூ சதமான வாக்குகளை மற்றுமே பெற முடிந்தது. இந்த கூட்டணி கட்சிகளை தவிர்த்து மோடி அரசு மிகவும் குறைவான வாக்குகளை பெற்று தான் இன்றும் ஆட்சியில் அமர்ந்துள்ளது. இந்த நிலைக்கு எதிர் கட்சிகளின் ஒற்றுமை இன்மையே காரணமாக அமைந்து விட்டது. ஒரு வேளை எதிர் கட்சிகள் இணைந்து செயல்பட மறுக்கும் நிலையில் மீண்டும் இந்தியாவில் மோடி தலைமையில் ஆட்சி வரலாம் என்பதே தற்போதைய நிலையாக இருக்கிறது.

தற்போதைய நிலையில் தேர்தல் வெற்றியை நோக்கி அரசியல் செய்யப்பட அதிகம் வாய்ப்பு உள்ளது . தற்போதைய நிலையில் இந்திய அரசியலில் வளர்ச்சியை தாண்டி வெறுப்பு பிரச்சாரம் மட்டுமே முதன்மை இடத்தை வகிக்கிறது . ஒரு வேளை வரும் தேர்தலில் இது போன்ற காரணிகள் பாரதிய ஜனதா கட்சிக்கு தேர்தலில் மீண்டும் ஒரு முறை கூட வெற்றியை தேடி தரலாம் .

அதேநேரத்தில், மிகப்பெரிய நிலப்பரப்பையும், பன்முகத்தன்மையும் கொண்ட இந்தியா என்கிற பெரிய தேசத்தின் அரசியல் சூழல் மிகுந்த கவலைக்குரிய ஒன்றாகவே பார்க்கப்படுகிறது . ஆனால், இந்தியாவில் மிகப் பெரிய சமூகமாக வாழும் முஸ்லிம்களை முழுமையாக ஒதுக்கி விட்டு அரசியலில் வெற்றி பெற எண்ணுவது வெறுமையான காணல் நீர் என்பதில் எந்த ஐயமும் இல்லை. இந்திய சுதந்திர போராட்ட வரலாற்றில் முஸ்லிம்கள் பங்கு இல்லாமல் இத்தனை பெரிய தேசமாக இந்தியா உருவாக எந்தவொரு நிலையிலும் வாய்ப்பே இல்லை வாய்ப்பே இல்லை என்பதே உண்மையாகும்.

இறுதியாக ஒன்றை மட்டுமே நம்மால் தெளிவாக கூற முடியும். இந்தியாவின் உயர்ந்த அதிகாரத்தில் உள்ள பிரதமர் மோடி தலைமையிலான இந்துத்துவ அடிப்படைவாத குழுக்கள் தொடர்ந்து முஸ்லிம்கள் வழிபடும் பள்ளிவாசல்களை தகர்த்து எறிந்து விட்டு கோயில் கட்ட வேண்டும் என்று மக்களை தூண்டும் வகையில் இழிவான அரசியலை முன்னெடுத்துச் செல்கிறது. இதனையெல்லாம் தட்டி கேட்க வேண்டிய தகுதி மற்றும் அதிகாரத்தில் இருந்து வரும் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் கருத்துக்களை ஆதரித்து பேசி வருகிறார். தொடர்ந்து இஸ்லாமிய சமூகம் இந்தியாவில் ஒரு விதமான அச்ச உணர்வுடன் தான் வாழ்ந்து வருகின்றனர். மதரஸாக்கள் தகர்க்கப்படுகிறது. 3,500 பள்ளிவாசல்களை உடைத்து கோயிலாக மாற்ற வேண்டும் என்று வெறிபிடித்த நிலையில் இந்துத்துவ அடிப்படைவாதிகள் தொடர்ந்து கொக்கறித்து வருகின்றனர். இந்த நிலையில் இந்திய பிரதமர் மோடி அபுதாபியில் நாராயணன் கோயிலை கட்டி திறப்பு விழா நடத்தி புகழாரம் சூட்டி மகிழ்ந்தார்.

இந் நிலையில் இதற்கான பதில் ஒவ்வொரு மனிதனின் மனசாட்சியின் உட்பகுதியில் ஆழமாக பொதிந்துள்ளது என்பதை தவிர இங்கே எழுதுவதற்கு வேறு ஒன்றுமேயில்லை என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டியதாக உள்ளது....!



# பேருவளை மருதானை அல் பாஸியதுல் நஸ்ரியா நூற்றாண்டு முத்திரை வெளியீடு





(பேருவளை பீ.எம்.முக்தார்)

இலங்கையின் முதல் முஸ்லிம் மகளிர் கல்லூரியான பேருவளை மருதானை அல் பாஸியத்துல் நஸ்ரியா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவையெட்டி நினைவு முத்திரை வெளியீட்டு விழா நேற்று (18) பாடசாலை அதிபர் மஸ்னவியா ரிப்கான் தலைமையில் மிக விமர்சையாக பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம் பெற்றது.

ஊடகத்துறை,போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன பிரதம அதிதியாகவும் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாகீர் மாக்கார் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இலங்கை தபால் திணைக்களம் நூற்றாண்டு விழாவையொட்டி முதல் நாள் விசேட ஞாபகார்த்த உரையுடன் 25 ரூபாய் பெறுமதியான ஞாபகர்த்த முத்திரையையும் வெளியிட்டுள்ளன.

முன்னாள் எம்.பி. அல்-ஹாஜ் எம்.எஸ்.எம்.அஸ்லம்,முன்னாள் நகர பிதா மஸாஹிம் முஹம்மத்,முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான இப்திகார் ஜெமீல்,எம்.எம். அம்ஜாத்,கல்விப் பணிப்பாளர் விக்ரம ஆராய்ச்சி,கோட்டக்கல்வி பணிப்பாளர் சோமரத்ன,பிரதேச செயலாளர் ரஞ்சன் பெரேரா, தபால் திணைக்கள உயரதிகாரிகள்,தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம்,இரத்தினக் கல் வர்த்தகர்கள் உலமாக்கள்,வைத்தியர்கள்,பள்ளிவாசல் நிர்வாகிகள்,பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள்,பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள்,பெற்றோர்கள்,நலன் விரும்பிகள் மாணவர்கள் என பெருமளவிலான ஓர் நிகழ்வில் பங்கு பெற்றினர்.

அமைச்சர் பந்துல குணவர்தன நூற்றாண்டு ஞாபகர்த்த முத்திரையுடனான முதல் நாள் உரையை இம்தியாஸ் பாக்கீர் மாக்காரிடம் வழங்கி வெளியீட்டு வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய சூரா கவுன்சிலின் சுதந்திர தின நிகழ்வு









(அஷ்ரப் ஏ சமத், ராபி ஷிஹாப்தீன்)

இலங்கையில் கடந்த ஒரு தசாப்தமாக சிவில் அமைப்புகளைக் கொண்டு இயங்கிவரும் தேசிய சூரா கவுன்சில் எனும் அமைப்பு கடந்த ஐந்து வருடங்களாக ஒவ்வொரு வருட சுதந்திர தினம் கழித்து அடுத்த வாரத்தில் இந்த நாட்டில் வாழும் நான்கு இனத்திலும் உள்ள மும்மொழிப் புத்திஜீவிகளை அழைத்து சொற்பொழிவுகளை ஆற்றி வருகிறது. இதில் இந்த நாட்டின் சுதந்திரத்திற்காக முஸ்லிம்களின் பங்களிப்பு, நமது முன்னைய முஸ்லிம்கள் மற்றும் தலைவர்கள், தனவந்தர்கள், வியாபாரிகள், பண்டைய காலந்தொட்டு சிங்கள அரசுகளுடன் இணைந்து அவர்கள் என்ன பங்களிப்பினை செய்தார்கள்? போன்ற தலைப்புக்கள் அலசப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் கடந்த வாரம் பெப்ரவரி 07ஆம் திகதி 76 வது சுதந்திர தினத்தை தொடர்ந்து தேசிய சூரா கவுன்சில் ஆனது இச் சபையின் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி ரீ.கே. அசூர் தலைமையில் கொழும்பு 7 ல் உள்ள ஜே.ஆர்.ஜெயவர்த்தன மண்டபத்தில் விசேட சொற்பொழிவொன்றை நடாத்தியது. இந் நிகழ்வில் சர்வ மதத் தலைவர்கள், ஊடகவியலாளர்கள், புத்திஜீவிகள் பலரும் பிரசன்னமாகியிருந்தனர்.

இந் நிகழ்வில் தலைமை உரையை தலைவர் ரீ.கே. அசூர் நிகழ்த்தினார். இச் சபையின் உப தலைவர் ஜாமியா நளீமியா நிறுவனத்தின் இஸ்லாமிய கற்கை நெறியின் பீடாதிபதி அஷ்ஷெய்க் எஸ்.எச். எம் பழீல், வல்பொல ராகுல நிறுவனத்தின் பணிப்பாளர் களனி பல்கலைக்கழகத்தின் முன்னாள் சிரேஷ்ட விரிவுரையாளர் கல்கந்த தர்மானந்த தேரர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியும், ராஜதந்திரியுமான எம்.எம். சுகைர் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள். அத்துடன் இவ் அமைப்பின் செயலாளர் சிரேஷ்ட சட்டத்தரணி ரசீட் இம்தியாஸ் நன்றியுரை நிகழ்த்தினார்.

இங்கு உரையாற்றிய கல்கந்த தர்மானந்த தேரர்,

நான் அம்பாறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அங்கு பழம் பெரும் கிராமங்களான உகன, பரனகலே போன்ற பழைய கிராமங்கள் இருந்தன. மாத்தளை கலவரத்தின் பின் பதுளை-மஹியங்கனை வழியாக சிங்கள மக்கள் அம்பாறையில் குடியேறினார்கள். 1952ல் சேனாநாயக்க சமுத்திரம் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் அவர்கள் இங்கு வந்து குடியேறினார்கள். ஆனால் அம்பாறையில் பழம் பெரும் மக்கள் வாழ்ந்த அக்கரைப்பற்று, கல்முனை, காத்தான்குடி பிரதேசங்களுக்குச் சென்று அங்கு தமிழ் பேசும் முஸ்லிம்களுடன் இணைந்து ஐக்கியமாக வியாபாரம் மற்றும் பல விடயங்களில் இணைந்து வாழ்ந்து வந்தார்கள்.

ஒவ்வொரு முறையும் இந்த நாட்டினை ஒரு குறிப்பிட்ட குடும்ப ஆட்சியாளர்களே ஆட்சி செய்து வந்துள்ளார்கள். ஆனால் இந்த நாட்டில் வாழும் சகல சமூகங்களும் இணைந்து பிரித்தானியரிடம் இருந்து சுதந்திரத்தினை பெற்றாலும், இவ்வருடம் 76 வது சுதந்திரத்தினைக் கொண்டாடினாலும், இதுவரை 5 வீதமான சுதந்திரமே நமக்கு கிடைத்துள்ளது. மிகுதி 95 வீதமான சுதந்திரம் கிடைக்கவில்லை. ஆட்சிக்கு வரும் ஆட்சியாளர்கள் நமது நாட்டின் சொத்துக்களையும் அனுபவிக்கின்றனர். இதற்கு உதாரணம் இந்தியா, சுமேரியா போன்ற நாடுகள் ஆகும். இந்தியாவில் கூட இன்னும் சகல இனங்களையும் இணைத்து ஐக்கியம் ஏற்படவில்லை. அசோகன் காலத்திலிருந்து தெற்கு இந்தியாவில் பிரச்சினைகள் இருந்து தான் வருகின்றன. இவற்றில் குலம், கணவன் மனைவி ,சிறுவர் திருமணம் போன்ற பல பிரச்சினைகள் உள்ளன. இலங்கையில் ஆங்கில மொழி சிறந்து விளங்கிய காலப்பகுதியில் இந்தியா, மாலைதீவு நாடுகளில் இருந்து ஆங்கிலம் கற்பதற்காக இலங்கைக்கு வந்தனர். ஆனால் தற்பொழுது அநேகம் பேர் இந்தியா சென்று மொழி கற்கக் கூடிய நிலைக்கு வந்துவிட்டது. இந்த பூமியில் பிறந்த சிங்கள, தமிழ், முஸ்லிம்கள் ஒரே குடும்பம் போல் இந்த நாட்டிலேயே வாழ்ந்து மடிய வேண்டும். நாம் அனைவரும் இலங்கையர்கள். இஸ்லாமியர்கள் இந்த நாட்டிற்கு ஒரு போதும் அநீதி இழைக்கவில்லை. அவர்கள் நபி முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறை, மற்றும் ஆட்சி முறையை பின்பற்றினாலே போதும். அராபியர்களை ஒன்றுபடுத்துவதற்காக அரபு பிரதேசத்தில் அவர் எடுத்துக் கொண்ட முயற்சியை ஒரு நற் பாடமாக நாம் எடுத்துக் கொள்ள முடியும். அவரது கொள்கை சகோதரத்துவ, ஏகத்துவ கொள்கையாகும். இலங்கையில் அவ்வப்போது இந்த நாட்டின் சிங்களத் தலைவர்களோடு இணைந்து முஸ்லிம் தலைவர்கள் ஆட்சியில் அங்கத்துவம் வகித்துள்ளார்கள். கடந்த இரண்டு தசாப்த காலத்திற்கு உள்ளே தனியான முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகள் உருவாகின. என கல்கந்த தேரர் அங்கு உரையாற்றினார்.

ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம். சுகைர்,

கலாநிதி லோரன் தேவராஜ் எழுதிய நூலில் 1000 வருடங்களுக்கு முன் இந்த நாட்டுக்கு வருகை தந்த முஸ்லிம்களின் வரலாற்றினை எழுதியுள்ளார். அதே போன்று பேராசிரியர் கே.எம். சில்வா இலங்கை முஸ்லிம்களின் முன்னாள் தலைவர்கள் இந்த நாட்டின் நலனுக்காகவும் சுதந்திரத்திற்காகவும் என்னென்ன முன்னெடுப்புக்களை ஆற்றியுள்ளனர் என்பது பற்றிய விவரங்களை எழுதியுள்ளார். அராபியர்கள் இந்த நாட்டுக்கு வியாபாரத்திற்காக வருகை தந்தாலும் அவர்கள் இந்த நாட்டிற்கு நன்மையே செய்துள்ளனர். உதாரணமாக பொருளாதார வீழ்ச்சியில் இருந்து இலங்கைக்கு காலம்சென்ற கொடை வள்ளல் நளீம் ஹாஜியார் பெருந்தொகையான டொலர்களை அவரது சொந்தப் பணத்திலிருந்து இந்த நாட்டிற்காக வழங்கியுள்ளார். முஸ்லிம்கள் அமைதியாகவும் சமாதான விரும்பிகளாகவும் இரு இனத்தவர்களுக்கான ஒற்றுமைப் பாலமாகவும் இருந்துள்ளார்கள். பண்டைய அரச காலத்திலிருந்து எமது முஸ்லிம் தலைவர்கள் இந்த நாட்டிற்காக செய்த நன்மைகள், உதவிகள், மற்றும் அவர்கள் நம்பிக்கை பொறுப்பானவர்களாக இருந்து வந்துள்ள சரித்திரங்கள் பற்றி சேர் பொன்னம்பலம் அருணாச்சலம், ஜே.எம். பீரிஸ், எம்.சி அப்துல் கபூர் போன்றவர்கள் விரிவாக சொல்லியுள்ளார்கள். என ஜனாதிபதி சட்டத்தரணி எம்.எம். சுகைர் உரை நிகழ்த்தினார்.

# இனிப்பும் கசப்பும்



சட்டத்தரணி ஏ.எம்.வைஸ்

## சிந்திப்போம் செயல்படுவோம்

### வயோதிபத்தில் வழியில்லாமல்போகும் கதீப் முஅத்தீன்கள்

சில வாரங்களுக்கு முன் தொழில் திணைக்களத்தில் கடமையாற்றும் ஒரு மேலதிகாரியை சந்திக்கக் கிடைத்தது. அவர் ஒரு முக்கிய விடயம் பற்றி பேச இருப்பதால் சந்தித்துப் பேச வேண்டும் என்று கூறினார். நாங்கள் ஒரு தினத்தை தீர்மானித்துக் கொண்டு சந்தித்தோம்.

அந்த சந்திப்பின்போது அவர் ஒரு கோவையை என்னிடம் காட்டினார். ஒருவர் தனக்கு இளைப்பாற்று சம்பளமோ, ஊழியர் சேமலாப நிதியோ, சேவைக் கால கொடுப்பனவோ, வழங்கப்படவில்லை என செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பான கோவையையே அவர் எனக்குக் காட்டினார்.

அதைப் பார்த்தபோது நான் அதிர்ச்சியடைந்தேன். அந்த முறைப்பாட்டுகள் ஒரு பள்ளி இமாமுடையது. அவர் பள்ளியிலே இமாமாக நீண்ட காலம் தொழில் புரிந்திருக்கிறார். புதிதாக பதவிக்கு வந்த நிர்வாகிகள் அதாவது டிரஸ்டிமார் அவரை பதவியில்ருந்து விலக்கியிருக்கின்றனர். நாளையிலிருந்து நீங்கள் வர வேண்டாம் என்று கூறியுள்ளார்கள். அவர் இதை எதிர்பார்க்கவில்லை.

வேறு என்னதான் செய்வது. வேறு எங்காவது தொழில் தேடியுள்ளார். அவருக்கு தெரிந்த தொழில் ள்ளிகளில் கடமையாற்றவது தான். ஒன்றில் இமாமாக இருக்க வேண்டும். கிடைக்காவிட்டால் முஅத்தீனாக தொழில் செய்ய வேண்டும்.

இமாம் பதவி இல்லாவிட்டால் முஅத்தினாக தொழில் செய்வோம் என்று அவர் முயற்சித்தாலும் எங்குமே கிடைக்கவில்லை. எல்லா இடங்களிலும் ஆட்கள் இருக்கின்றனர். முன்னைய காலங்களில் உலமாக்களை தேடுவது கஷ்டம். ஆனால் தற்போது உருக்கு ஊர் மத்ரஸாக்கள் உள்ளதாலும் ஒரே ஊரில் பல மத்ரஸாக்கள் இருப்பதாலும் வெளிவரும் உலமாக்கள் அதிகமாகி விட்டார்கள். குடும்பகாரன் என்ன செய்வது சில தினங்கள் வீட்டில் இருந்த பார்த்தார். வேறு வசதியில்லை. வருமானமுமில்லை.

கடையொன்றில் வேலை செய்திருந்தால் கூட வயது போன பின் ஏதாவது கிடைத்திருக்கும். ஊழியர் சேமலாப நிதியாவது கிடைக்கும். இவற்றையெல்லாம் சிந்தித்த அந்த உலமா இறுதியிலே தொழில் திணைக்களத்திற்கு செய்று முறைப்பாடு செய்துள்ளார்.

அந்த உலமாவைப் பெறுத்த வரை அவர் தவறல்ல. இலங்கையில் உள்ள சட்டப்படி எவராவது சம்பளம் பெறும் தொழில் செய்வதாயின் அது அரசாங்க தொழில் எனின் இளைப்பாற்று சம்பளம் எனும் பென்ஷன் உள்ளது. வேற்று தொழிலாயின் ஊழியர் சேமலாப நிதி உள்ளது. இது கட்டாயம் செலுத்தப்பட வேண்டும். சம்பளத்தில் ஒரு விகிதத்தை தொழிலாளரும், சேர்த்து தொழில் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும். இப்போதைய நிலையில் தொழிலாளியின் சம்பளத்தில் 8மூ த்தையும் தொழில் வழங்குபவா 12மூ த்தையும் போட்டு 20மூ த்தை தொழில் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும். தொழிலாளர் இளைப்பாற்றிய பின் அவரது குறிப்பிட்ட வயதில் அத்தொகை அவருக்கு வழங்கப்படும்.

பள்ளிவாசல்களிலும் இமாம்கள் முஅத்தீன்கள் சம்பளத்திற்கு வேலை செய்கின்றனர். அரசாங்க சட்டப்படி இது தொழிலாகக் கருதப்பட்டால் அவர்களுக்கும் இந்த நிதிக்கு பணம் அனுப்ப வேண்டும். அவர்கள் வயதான பின் அதாவது இளைப்பாற்றிய பின் இந்த பணத்தை இவர்கள் பெறுவர்.

மாதாந்த சம்பளத்தில் தொழில் திணைக்களத்திற்கு பணம் அனுப்பா விட்டால் தொழில் திணைக்களம் தொழில் வழங்குபவருக்கு எதிராக வழங்குத் தாக்கல் செய்வர்.

இதை அறிந்து தான் நான் முன் கூறிய உலமாவும் தொழில் திணைக்களத்தில் முறைப்பாடு செய்தள்ளார். பௌத்த விகாரைகளில் உள்ள பிக்குகளுக்கும், கிறிஸ்தவ கத்தோலிக்க குருமாருக்கும், இந்து குருமாருக்கும் சம்பளம் வழங்கப்படுவதில்லை. ஆனால் பள்ளிவாசல் இமாம்களுக்கும் முஅத்தீன்களுக்கும் சம்பளம் வழங்கப்படுகிறது. இது தான் உள்ள சட்டப் பிரச்சினை.

அந்த தொழில் அதிகாரி இதை சமாதானமாகத் தீர்த்து வைத்து விட வேண்டும் என்ற நோக்கிலேயே கதைத்தார். இறுதியில் குறிப்பிட்ட பளிள்ளிவாசல் ஒரு தொகைப் பணத்தை அன்பளிப்பாக வழங்கி பிரச்சினையை முடித்துக் கொண்டது.

இலங்கை கத்தீப்மார் சம்மேளனம் கதீப்மார்கள் முஅத்தீன்களுக்கு ஒரு இளைப்பாற்று நிதி முறையை கொண்டு வந்தது. ஒரு வங்கியுடன் ஒப்பந்தம் செய்து இந்த இளைப்பாற்று நிதியை கொண்டு வந்தது.

அது சரியாக முன்னெடுக்கப்படவில்லை. சில பள்ளி நிர்வாகங்கள் இதில் பங்களிக்கவில்லை. இது வெற்றியடைந்திருந்தால் இவ்வாறான பிரச்சினைகள் எழாது.

எனவே, உலமா சபையும், வக்பு சபையும், முஸ்லிம் விவகார திணைக்களமும் இது பற்றி சிந்திக்க வேண்டும். பள்ளி வாசலில் சம்பளம் பெற்று தொழில் புரிவோருக்கான இளைப்பாற்று நிதித் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். எமது உலமாக்களின் வயோதிப காலத்திற்கு உதவ வழி செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்ல இந்த நிதிக்கு குறிப்பிட்ட உலமாக்களின் பெயரில் மாதாந்தம் வைப்புச் செய்ய பள்ளி நிர்வாகங்களுக்கு உத்தரவிட வேண்டும்.

அந்த உலமாக்கள் பணியைச் செய்ய முடியாத வயதை அடைந்ததும், அந்த வைப்பை அவர்களுக்கு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இதற்கு சம்பளத்தில் ஒரு சிறு விகிதத்தை இமாம், முகத்தீன்களின் சம்பளத்திலிருந்து கழித்து அத்தோடு பள்ளி நிர்வாகம் ஒரு கூடிய விகிதத்தை சேர்த்து வைப்பாக இட வேண்டும். இதற்கென ஒரு இஸ்லாமிய வங்கியோடு ஒப்பந்தம் செய்து கொள்ளலாம் அல்லது முன்னர் கதீப்மார்கள் சம்மேளனம் கொண்டு வந்த இளைப்பாற்றுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம்.

# முஸ்லிம்கள் என்பதால் மீள் குடியேற்றத்தில் புறக்கணிப்பு



ஏ.எச்.ஏ. ஹுஸைன்

**(மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி நிருவாகப் பாரபட்சம் தொடர். 14)**

மூத்த அறிஞர், எழுத்தாளர், மக்கத்துச் சால்வை எஸ்.எல்.எம். ஹனீபா, காணி விடயத்தில் மட்டக்களப்பு முஸ்லிம் சமூகத்திற்கு இழைக்கப்பட்ட அநீதிகளை வரலாற்றுச் சான்றுகளோடு மேலும் எடுத்துச் சொல்கிறார். மட்டக்களப்பு மாவட்டத்தில் கடமையாற்றிய உயர் அரச அதிகாரிகளின் அனுசரணையோடு முஸ்லிம் பிரதேச செயலகங்கள் காணிகள் முறையற்று இன்னொரு பிரதேச செயலகத்தினால் நிர்வாகம் செய்யப்படுவதற்கு உடந்தை காட்டப்படுகிறதென்பதை குறிப்பிடும் விதமாகவே முஸ்லிம்களின் காணிகள் களவாடப்பட்டிருக்கிறது என்ற வார்த்தைப் பிரயோகத்தை கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஸீர் அஹமட் அவர்கள் முறையான புள்ளி விபரங்களோடு, பயன்படுத்தினார்.இலங்கை அரசின் வர்த்தமானியின் பிரகாரம் பிரகடனம் செய்யப்பட்ட பரப்பளவை அடிப்படையாகக் கொண்டே பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நஸீர் அஹமட் அவர்களினால் ஆவணங்கள் முறையாகச் சமர்ப்பிக்கப்பட்டன.இதனை ஒரு அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய நீங்கள் மறுதலிக்க முற்படுகின்றீர்களா? என உங்களிடம் வினவுகின்றேன்.எனவே, இம்மாவட்டத்தில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி தொடர்பான பிரச்சினைகளை உளப்பூர்வமாக அறிந்து வைத்திருக்கும் உங்களைப்போன்ற அதிகாரிகளால் எவ்வாறு இப்படிச் செயல்பட முடிகிறது?தங்களால் முன்வைக்கப்பட்ட மற்றுமொரு குற்றச்சாட்டுத்தான் தமிழ் அகராதியிலேயே இல்லாத அதிகாரப்பயங்கரவாதம் எனும் வார்த்தைப்பிரயோகம் செய்யப்பட்டதைக் குறிப்பிட்டிருந்தீர்கள்.பயங்கரவாதமென்பது ஒரு சமூகத்திற்கெதிராக அத்துமீறிய அடக்குமுறையை ஏதாவதொரு அடிப்படையில் பயன்படுத்துவதேயாகும். அந்த அடிப்படையில், மட்டக்களப்பு மாவட்டத்தில், கடந்த காலத்தில், எல்ரீரீஈ இயக்கத்தினரால் முஸ்லிம்கள் மீது ஆயுதமுனையில் பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தது என்பதைத் தாங்கள் அறிந்திருப்பீர்கள்.அரசாங்கத்தினால் ஆயுதப்பயங்கரவாதம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் முஸ்லிம் சமூகத்தின் மீது அதிகார ரீதியான தங்களின் ஆதிக்கத்தைப் பிரயோகித்து பல்வேறுபட்ட வழிமுறைகளிலும் முஸ்லிம் மக்களுக்கு பலவிதமான அநீதிகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் அதிகாரத்தோரணையில் நிகழ்த்தியது தங்களுக்குத் தெரியாதா?இதற்குச் சான்றாக பல உதாரணங்களை முன்வைக்க முடியும். குறிப்பாக, வாகரை, கிரான் போன்ற பிரதேச செயலகப் பிரிவுகளில் காணப்படுகின்ற முஸ்லிம்களின் காணிகளுக்கு அவற்றுக்கான உரிமங்களைக்கோரி விண்ணப்பித்திருந்த பல்லாயிரம் முஸ்லிம்களுக்கு இதுவரை காணிகளுக்கான ஆவணங்கள் வழங்கப்படாமல் இன ரீதியாக அவர்கள் பழிவாங்கப்படுதல் உங்களுக்குத் தெரியும்தானே.இந்த மாவட்டத்தில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டிய கிராமமாக இன்றுவரை கள்ளிச்சைக்கிராமம் காணப்படுவதும், அது இன்றுவரை மீள்குடியேற்றம் செய்யப்படாமல் புறக்கணிக்கப்பட்டிருப்பதும் அங்கு வெளியேற்றப்பட்டவர்கள் முஸ்லிம்கள் என்ற ஒரே காரணத்தினால்தான் என்பதை எல்லோரும் அறிவார்கள்.இதற்கும் கூட பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் ஒரு புது விளக்கம் கொடுத்திருந்தார். அதாவது, கள்ளிச்சைக் கிராமத்தில் யுத்த காலத்தில் இடம்பெயர்ந்த அனைவரையும் ரிதிதென்ன, ஜெயந்தியாய கிராமத்தில் றீலொக்கேற் செய்து விட்டதாகச் சொல்லியிருந்தார்.முடிந்தால் உங்களால் மாவட்ட செயலகத்திலிருக்கும் அந்த றீலொக்கேற் செய்த ஆவணத்தை எங்களுக்கு காட்ட முடியுமா? இவ்வாறுதான் உங்களிடமுள்ள அரச அதிகாரத்தை முஸ்லிம் சமூகத்துக்கெதிராக நீங்கள் பயன்படுத்துவதைத்தான் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் அரச பயங்கரவாதமாக இன்று பார்க்கப்படுகிறதுஇதேபோன்று, மாவட்ட செயலகத்தில் ஒரு உயர்நிலைப் பதவிக்காக முறையாக நியமனம் பெற்ற பல முஸ்லிம்களை திட்டமிட்டுத் துரத்தியடிப்புச் செய்தததனூடாக தங்களின் விரோத மனப்பாங்கையும் குரோதத்தையும் அதிகாரப் பயங்கரவாதத்தையும் பல தடவைகளில் வெளிப்படுத்தியதை தாங்கள் மறந்திருக்கமாட்டீர்கள்.உதாரணமாக, மேலதிக அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்ட ஷரீப் அவர்களுக்கு மாவட்ட செயலகத்தில் இடவொதுக்கீடு செய்யாமலே இடமாற்றம் பெறவைத்தீர்கள். அதேபோன்று, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட வஹாப்தீனை கடமையைப் பொறுப்பேற்பதற்கு முன்னரே வர விடாமல் தடுத்தார்கள். இதுபோன்று உங்களுடைய அதிகார வெறியை பல இடங்களில் முஸ்லிம் அலுவலர்களுக்கெதிராக காட்டியுள்ளீர்கள்.அதிகாரப்பயங்கரவாதம் என்கின்ற உங்களது அடக்குமுறையின் நடைமுறைகளுக்கெதிராக எதிர்காலத்தில் முஸ்லிம்கள் குரலெழுப்பும்போது ஆச்சரியப்பட எதுவுமில்லை என்பதையும் தங்களுக்கு நினைவு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.எனவே, கௌரவ தமிழ் அரசியல்வாதிகள், அதிகாரிகள் இம்மாவட்டத்தில் உங்களோடு மொழி ரீதியாக இணைந்து வாழும் முஸ்லிம்களின் யதார்த்தமான பிரச்சினைகளை உள்வாங்கி இரு சமூகங்களும் இணைந்து வாழ்வதற்குரிய மனப்பூர்வமான விட்டுக்கொடுப்புக்களைச் செய்வதிலிருந்து தவறிவிடுவீர்களாயின், எதிர்காலத்தில் இவ்விரு சமூகங்களும் துருவப்பட்டுப்போகும் நிலைமை கவலைக்குரியதாக நடந்தேறுமென்று நான் அஞ்சுகிறேன்.மட்டக்களப்பு மாவட்டம் கல்குடாத் தொகுதியில் மீராவோடை, ஓட்டமாவடி, வாழைச்சேனை என்ற முஸ்லிம் கிராமங்களும் அதே பெயருடனான தமிழ்க் கிராமங்களிலும் தமிழர்களும் முஸ்லிம்களும் பல்லாண்டுகள் வாழ்ந்து வநதுள்ளார்கள் என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. விடுதலையின் பெயரால் நிகழ்ந்த எத்தனையோ வேண்டத்தகாத சங்கதிகளில் தமிழ் முஸ்லிம் உறவும் பாழ்பட்டுப் போனது. எந்தவொரு தமிழ் இயக்கத்தாலும் குட்டுப்படாத முஸ்லிம்களைக் காண்பது அரிது.இவற்றையெல்லாம் வரலாற்று ரீதியாக சொல்லிக் கொள்வதற்கான ஒரு குறிப்பை இங்கே தமிழ் முஸ்லிம் மக்களிடம் முன் வைக்கிறேன்.1950களின் ஆரம்பம். மீராவோடை தமிழ்ப் பகுதியைச் சேர்ந்த அண்ணாவி, முருகன், மார்த்தாண்டன், வேலன் என்போரும் மீராவோடை முஸ்லிம் பகுதியைச் சேர்ந்த எனது தகப்பனார், வாப்பிச்சி, பக்கீர் முகைதீன் (ஓடக்கரை) இவர்கள் அனைவரும் அதிகாலை வேளையில் தங்களுடைய தொழிலுக்காக கல்குடா கரை வலைக்கு கால்நடையாகப் போவார்கள். தமிழ்த்த தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் மட்டக்களப்பு எம்பி ஜெயானந்தமூர்த்தியின் மூத்த அண்ணன் தியாகமூர்த்தியும் அவரது அக்கா சுகிர்தராணியும் என்னோடு கூடவே ஓட்டமாவடி மகா வித்தியாலயத்தில் படித்தவர்கள். மீராவோடை கறுவாக்கேணி வீதியால் சென்று பெரிய பங்கில் இறங்கி, கைகாட்டி மரத்தைக் கடந்து கல்குடா ஸ்டேஷனால் திரும்பி கடற்கரையை அடைவார்கள். காலை 10 மணியளவில் கரை வலை கரை தட்டியதும் மீன்கள் நிரம்பிய இரண்டு கூடைகளும் தோளில் நின்று கூத்துப்போட, குருத்து மணலில் அவர்கள் ஓடியோடி நடந்து வரும் காட்சி இன்னும் மனதில் அப்பிக் கிடக்கிறது.இப்பொழுது கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயத்திற்கு முன்னாலுள்ள காணிகளில் மீராவோடை தமிழ் முஸ்லிம் மீனவர்கள் குடியேறியிருந்தார்கள். எங்களுக்கும் ஒரு துண்டுப்பூமி வீதியோரமாக இருந்தது. சின்னக் குடிலும் கொத்து வேலியும். பாடசாலை விட்டு வந்ததும், எங்கள் தகப்பன்மாருக்கு பகற்சாப்பாட்டை எடுத்துக் கொண்டு கறுவாக்கேணியிலிருந்த அந்தக் குடிலுக்குள் காத்திருப்போம்.பகல் 1 மணியளவில் கரை வலையிலிருந்து தகப்பன்மார் கரையேறுவார்கள். இந்தக் காலகட்டத்தில் ஐம்பதுகளின் மத்தியில், பிறைந்துறைச்சேனையில் மங்களராம விகாரை கட்டப்படுகிறது. 1960களின் ஆரம்பத்தில் கோறளைப்பற்று டி.ஆர். ஓவாக க.சண்முகலிங்கம் அவர்கள் கடமை புரிகிறார்கள். விகாரையைச் சுற்றி பெரும்பான்மையின மக்களை குடியேற்றும் நடவடிக்கை பிரதம மந்திரி அவர்களின் காரியாலயத்தினூடாக முடுக்கி விடப்பட்டபோது, சண்முகலிங்கம் ஐயா அவர்கள், எங்கள் பகுதி முஸ்லிம் பிரமுகர்களை அழைத்து, இந்த விடயத்தை முன்வைக்கிறார்கள். உடனடியாகவே எமது பகுதி மக்களுக்கு ஒரு வேண்டுகோளையும் முன்வைத்தார்கள். “இப்பொழுது ஓட்டமாவடியில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களுக்கு எதிர்காலத்தில் அவர்களுடைய குடிப்பரம்பல்களுக்கு போதிய நிலம் இல்லாமல் போகும்.இதனால், மீராவோடையிலிருந்து கறுவாக்கேணியில் காணி பிடித்துள்ள முஸ்லிம்கள் கறுவாக்கேணிக் கிராமத்தை தமிழர்களுக்கு வழங்கி விட்டு, முஸ்லிம் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பிறைந்துறைச்சேனையில் குடியேறுங்கள்” என்று பணித்தார்கள். அந்த வேண்டுகோளை அனைவரும் ஏற்று நடைமுறைப்படுத்தினர்.இதன் மூலம் பிறைந்துறைச்சேனையில் பெரும்பான்மையின மக்கள் குடியேறுவது சாதுரியமாக தடுக்கப்பட்டது. அந்தக் காரியத்தைச் செய்த சண்முகலிங்கம் ஐயா என்றும் இப்பகுதி மக்களின் சங்கைக்குரியவராகிறார். பின்னர், படிப்படியாக ஓட்டமாவடியில் வாழ்ந்த தமிழர்கள் தங்கள் காணிகளை முஸ்லிம்களுக்கு நல்ல விலைக்கு விற்பனை செய்து விட்டு கறுவாக்கேணியில் குடிபெயர்ந்தனர். இதுவே உண்மை.இது ஒருபுறமிருக்க, ஓட்டமாவடியின் பிரதான சாலையை அண்டியும் புகையிரத வீதியைக் கடந்த ஆற்றங்கரை ஓரமாகவும் தமிழர்கள் குடியேறியிருந்தார்கள். அவர்கள் உயர்சாதி தமிழர்களால் தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தார்கள். வாழைச்சேனை, ஓட்டமாவடி, மீராவோடைப் பகுதிகளில் அந்த நாட்களில் வாளிக் கக்கூஸ் புழக்கத்திலிருந்தது. இவற்றைத் துப்புரவு செய்யும் தொழிலாளிகளும் சலவைத் தொழிலாளிகளுமே இந்த இடங்களில் முதன் முதலில் குடியேறினர்.இந்தக் கால கட்டத்தில் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் இந்த நாட்டின் கைத்தொழில் அமைச்சராகப் பதவி வகிக்கிறார். ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட எத்தனையோ தொழிற்சாலைகளில் வாழைச்சேனை காகித ஆலையும் ஒன்று. யாழ்ப்பாணத்திலிருந்து தொழிலாளர்களாகவும் அதிகாரிகளாகவும் உத்தியோகம் பெற்று இங்கு தமிழர்கள் வருகிறார்கள்.இவர்களில் சிற்றூழியர்கள் பலரும் நான் மேலே சொன்ன ஓட்டமாவடியின் புகையிரத நிலையத்திற்குச் சொந்தமான ரிசர்வேஷன் காணியில் ஆற்றங்கரை ஓரமாகவும் குடியேறுகிறார்கள். என்னுடைய ஊகம், இந்த மக்களும் யாழ்ப்பாணத்திலிருந்த தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்தவர்களாக இருக்குமோ நானறியேன். இதைப் படிக்கும் பாக்கியம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி அவர்களுக்குக் கிட்டுமானால் இந்த ரிஷி மூலத்தை அவர் விடுவிக்கலாம். ஏனெனில், அவ்வாறு தொழில் பெற்று வந்தவர்களில் அவருடைய தகப்பனாரும் ஒருவர். அவரும் இந்த இடத்திலேயே குடியமர்ந்தார். (மட்டக்களப்பில் காணி நிருவாகப் பாரபட்சம் வரும் வாரமும் வரும்)

















நாச்சியாதீவு பர்வீன்

# அப்துல் றஸாக் எனும் இரசனை மொழி

## கலைஞன்– வாசகனின் வாக்கு மூலம்

**மருதமுனை குர்சித்**

அவரது "வாக்கு மூலம்" நாவல் வந்தபோது பல்கலைக் கழகம் கிடு கிடுத்துத்தான் போனது. அது அவரது அனுபவ ஒப்புவிப்பு வழி விரிந்த ஒரு நாவல் பவாஸ் இலாஹியும் ஏனைய உலவு பாத்திரங்களும் நாம் கண்டு கடந்த உருப்படிகளின் அசல் பிம்பங்கள். அனுபவத்தை மீறிய துடிப்பும் தமிழ் பரவசமும் அப்துல் றஸாக்கை அந் நாவல் எழுதத் தூண்டியிருக்கக் கூடும். நாவல் வந்த புதிதில் இஸ்ரேல் போடும் குண்டில் சிதறிய பலஸ்த்தீனியரைப் போல அவரது நட்பு வட்டம் சிதறி அவரை விட்டு தூரமாயின. பின்னர் காலமும் நேரமும் அவர்களுள் மீண்டு... கை குலுக்கும் சமாதான உடன் படிக்கையை செய்து வைத்தது.

அப்துல் றஸாக் தனது பல்கலைக் கழக நாட்களில் தீவிரமாக இயங்கினார். தமிழ்ச் சங்கம் துயரி இதழ், அதிர்வு'2 என நீளும் தமிழ் செயலூக்கங்களில் அவரது பங்கு முனைப்புற்றிருந்தது. தவிரவும் அவர் கலை விழாக்களையும் புதன் நிகழ்வுகளிலும் தீராப் பணிபுரிந்தார்.

2004களின் தொடக்கத்து இரவொன்றில் பொடுகு பறக்க தலை சொறிந்து கொண்டிருந்தேன்.

1100 வகையான எனது செல் போன் தூக்கச் சொல்லி ஒப்பாரி வைத்தது. தூக்கி காதின் சோணையில் வைத்தேன். கூரைத் தகட்டில் கல்லால் எறிந்தது போல் ஒரு கணீர் குரல் "எங்கேயோ கேட்ட குரல்". முகமன் விசாரித்தது. யாராயிருக்கும் சுதாரித்துக் கொண்டேன். அது அப்துல் றஸாக் யுனிவஸிற்றியை துறந்து நான் வந்திருந்த இந்த இரண்டு வருடத்துக்குள்ளும் மல்வத்தை றேடியோ ஸ்ரேசன் போல அவர் குரலில் ஒரு தெளிவு கூடியிருந்தது. துயரி'4 வரப் போவதாகவும் அதற்கொரு "சினிமா சார்" கட்டுரை வேண்டும் என்றார். ஒத்துக் கொண்டேன். எனக்கு தெரிந்த வித்தையைக் கோர்த்து செய்து கொடுத்தேன். "சேரனின் ஆட்டோ கிரா ஃப்: வாழ்வு பற்றிய அனுபவமும் அனுபவம் பற்றிய அழகியலும்" என்ற அக் கட்டுரை வந்ததும், மீண்டும் தொடர்பில் வந்து ஒரு பாராட்டும் சில நன்றிகளும் வைத்தார். இதுதான் அப்துல் றஸாக்கின் பிரதான குணம் விமர்சனத்தை "பச்சை"யாகவே ஏற்றுத் தாழ்வின்றி வெளிப்படுத்தும் பண்பு அவரிடம் ஆரம்பத்திலிருந்தே நான் கண்டிருக்கிறேன்.

அப்துல் றஸாக் பெரு வெளி என்ற மாற்றுச் சஞ்சிகை செயற்பாட்டளர்களில் ஒருவராக இருந்தவர். பெருவெளி அந் நாட்களில் பின் நவினத்துவம் சார்ந்த சிந்தனை ஒழுக்கில் பெரும் அதிர்த்தலை செய்த சஞ்சிகை.ஞானிகள் கனவில் கண்டுணர்ந்த சித்தாந்தங்களை நிகழ் நிலையில் சொல்வத போல கட்டிறுக்கமான பல மொழிச் செம்மையும் பரிசோதனை யுக்தியும் அவ்விதழினை முன்னிலைப்படுத்தியது. தளக் கோலம் சரவை நோக்கும் மிக அச்சொட்டாக பேணப்பட்ட அசுர உழைப்பு அதில் நான் கண்டு வியந்திருக்கிறேன். ஆனால் என்னவொன்று இலக்கிய பரிட்சயம் குறைந்தவன் அச் சஞ்சிகையை வாசிக்கத் தொடங்கினானால் ஒன்றிரண்டு கட்டுரையை தாண்டுவதற்கிடயில் அவன் மூளைச் சாவடைந்து மரணிப்பது சர்வ நிச்சயம்.

அப்துல் றஸாக் நல்லதொரு பேச்சாளர். விமர்சகர். வருடத்தில் கிழக்கு மகாணமெங்கும் நடக்கும் இலக்கிய விழாக்களில் முக்கால் வாசியில் அவர் ஒரு பேச்சாளராக அல்லது புத்தக அலசுனராக அல்லது விமர்சகராக இருப்பார். அவரது மூச்சுப்பட்டதும் "மைக்" சுதாரித்துக் கொண்டு உரத்துப் பேசும். "அ"வை தொடங்கினால் "ஔ" வரை நகர்த்துகின்ற பேச்சு வன்மை அவருக்கு வாய்க்கப் பெற்றிருந்தது. மென்மையை தொட்டு தொடங்கும் அவர் பேச்சு விசயங்களின் மீது நர்த்தனமிடத் தொடங்க, ஒரு கட்டத்தில்கிழங்கு பொரியும் எண்ணெயில் உப்பு ஊற்றப்பட்டது போல வீறிட்டெழும் ஈற்றில் "றிட்சர்" அளவீட்டில் அளக்கும் படிக்கு உச்சம் தொட்டு மெல்ல அணைந்து நிற்கும்.

அப்துல் றஸாக் பிரபல தமிழ் உபாத்தியாயர். நீண்ட காலமாக தமிழை பாடசாலை மாணவர்களுக்காக கற்பித்துக் காட்டியவர். அவரின் வாரிசுகளாக.. நீளும் பட்டியல்கள் சாதித்துக் காட்டி நிற்கின்றன.இன்று தென் கிழக்கு இலக்கியப் புலத்தில் பிரகாசிக்கும் அனேக இளம் தரவடிகள் அப்துல் றஸாக்கிடம் கற்றவர்களே. துறை வேறாகிப் போனவர்கள் கூட அப்துல் றஸாக் கற்றுக் கொடுத்த தமிழின் வள்ளன்மைக் குணத்தால் ஆக்க இலக்கிய உற்பத்தியாளர்களாக உருமாறிப் போயினர்.

அப்துல் றஸாக் தமிழ் பாடத்தின் துணை நூல்களாக எழுதியவைகள் இன்று வரைக்கும் மாணவர்கள் ஈறுகளில் நித்திரை தேக்கும் நள்ளிரவு வரை, தேடிப் படிக்கின்ற உசாத்துணையாக தொழிற்படுகின்றன.

அப்துல் றஸாக் நல்ல இலக்கிய காரன். இருந்தும் இலக்கிய காரர்களில் பெரும்பாலானவர்களிடம் குடி கொண்டிருக்கும் "தம்மை மீறிய உணர்ச்சியின் வயப்படுதலும் நீதியொன்றை கண்டடைவது"மான ரோகம் அவரை தொற்றவில்லை. அவர் தன்னை ஒரு சம வலுவில் நிறுத்திக் கொண்டார். தன் கண்டடைய வேண்டிய புள்ளியை அவர் நன்கு திட்டமிட்டு அதை நோக்கி தன்னை ஸ்திரப்படுத்திக் கொண்டார்.

இன்று அப்துல் றஸாக் தமிழ் துறையில் விரிவுரையாளர். நல்ல இடம். நல்ல திண்ம மற்றும் அசைவுறு வளங்கள். நல்லதை நடத்தும் சூழல். மாணவர்களும் சமுகமும் நல்லது காண முனைப்பாற்றுவார் எனும் நம்பிக்கை நிரம்பவுமே உண்டு. காத்திருக்க தொடங்குவோம்.

– முற்றும் –

# வரம் வேண்டும்

நல்லோர் வழியில்
நடந்தே நாம்
நாளும் நன்மை பெறவேண்டும்

கயமை போன்ற கறைகளினைக்
கழுவ கண்ணீர்த் துளிவேண்டும்

அல்லும் பகலும் இறைவனிடம்
அஞ்சிக் கேட்கும் மனம்வேண்டும்
வெல்லும் வாய்மை அதைப்போற்றி
விளையும் நன்மை பெறவேண்டும்

தொல்லை நிறைந்த வேளையிலும்
துணிந்தே நிற்கும் உளம்வேண்டும்

உள்ளும் புறமும் உணர்வலைகள்
ஊனம் யில்லா நிலைவேண்டும்

நல்லவை யெண்ணி அனுதினமும்
நன்மை செய்யும் மனம்வேண்டும்

இல்லறம் பேணி எப்போதும்
இல்லம் காக்கும் குணம்வேண்டும்

பொல்லா நட்பில் புதையாமல்
புரிதல் உள்ளோர் வரவேண்டும்
எல்லாம் ஏகன் துணையோடு
எழுந்தே என்முன் வரவேண்டும்
சொல்லும் செயலும் நமக்குள்ளே
சுழன்றே மேன்மை பெறவேண்டும்
வல்லோன் காட்டிய வழிநடந்து
வாழ்வில் உயரும்
வரம் வேண்டும்!

– ஷிபானியா பௌசுல் (நேகம) –

# வலம்புரி கவிதா வட்டத்தின் கவியரங்கு

(ஐ. ஏ. காதிர் கான்)

*வலம்புரி கவிதா வட்டத்தின் 97 ஆவது கவியரங்கம், இம்மாதம் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு, கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெறும்.*

*கவிஞர் "இளநெஞ்சன்" முர்ஷிதீன் கவியரங்கினைத் தலைமையேற்று நடாத்துகிறார்.*

*நிகழ்வுக்கான ஏற்பாடுகளை, வகவத் தலைவர் என். நஜ்முல் ஹுசைன், பொருளாளர் ஈழகணேஷ் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர்.*

# வெறும் 360,000 ரூபாவுக்கு குழந்தையை விற்க முயன்ற தாய்!

## மினுவாங்கொடையில் சம்பவம்: அதிரடியாக தாய் கைது!

*மினுவாங்கொடை பிரதேசத்தில் பிறந்து 9 நாட்களே ஆன குழந்தையை வேறு தரப்பினருக்கு சட்டவிரோதமான முறையில் விற்க முயன்ற பெண் ஒருவர் நேற்று பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியக அதிகாரிகளினால் இந்த பெண் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.*



*28 வயதுடைய சந்தேக நபரான பெண் குழந்தையின் தாய் எனத் தெரியவந்துள்ளது.*

*அத்துடன், அவர் குழந்தையை 360,000 ரூபாவுக்கு விற்க திட்டமிட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.*

*பன்சில்கொட பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக மினுவாங்கொடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.*

*தற்போது மினுவாங்கொடை பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர் நாளை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.*

# வடமேல் மாகாணத்தின் முதலாவது முதலமைச்சர் ஜெய விக்கிரம பெரேரா காலமானார்

*வடமேல் மாகாணத்தின் முதலாவது முதலமைச்சரும் ஐ தே காவின் மூத்த அரசியல்வாதியுமான காமினி ஜெய விக்கிரம பெரேரா தனது 83 ஆவது வயதில் காலமானார். 1973 ஆம் ஆண்டு கட்டு கம்பளை தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற இவர் 77 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டார்.*

*ஜனாதிபதியின் நெருங்கிய சகவாக இருந்த இவர் பல அமைச்சுப் பதவிகளை வகித்து இருந்தார். இவருடைய இறுதி கிரியைகள் செவ்வாய்க்கிழமை 3 மணிக்கு பண்ணலையில் நடைபெறும்.*





மூதூர் பிரதேசத்தில் போஷாக்கு மட்டம் குறைந்த ஐந்து வயதிற்குட்பட்ட பிள்ளைகளுக்கான போஷாக்குணவுப்பொதிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு சுகாதார வைத்திய அதிகாரி ஹில்மி முஹைதீன் தலைமையில் இடம்பெற்றது. அண்மையில் சுகாதாரப்பனிமனையில் இடம்பெற்ற இன்நிகழ்விற்கு unicef நிருவனம் அனுசரணை வழங்கியது.

(மூதூர்.எஸ்.ஏ.பறூஸ்)

## மனநலமும் ஆலோசனையும் 19

# பணம் செய்யாததை பாராட்டு செய்யும்

மற்றவர்களை விமர்சிக்கும்போது சப்தமிட்டு விமர்சிக்கிறோம்.

நல்ல செயல்களுக்கு பாராட்டவேண்டி ஏற்படும்போது மௌனம் சாதிக்கிறோம்.

பாராட்டை வெளிப்படுத்துமாறு இறைதூதர் எமக்கு கற்றுத்தந்திருக்கிறார்கள்.

ஊக்கப்படுத்தியும் இருக்கிறார்கள்.

மக்கள் ஏதாவது நல்லது செய்யும்போது

அவர்களை பாராட்டும் போதும் நன்றி செலுத்தும் போதும் அவர்களிடமிருந்து

இன்னும் அதிகமான நல்ல விடயங்கள் வெகுமதியாக கிடைக்கும்.

பாராட்டு தெரிவிப்பது மனித குணங்களின் உயர்வான ஒரு குணமாகும். பாராட்டுவதற்கு பணம் வேண்டும் என்றோ பொருள் வேண்டும் என்றோ இல்லை.

சிறியதொரு புன்னகையால் பாராட்டலாம்.

தலைதடவி பாராட்டலாம்.

முதுகில் தட்டி பாராட்டலாம்.

கைகுலுக்கி பாராட்டலாம்.

பிரார்த்தனை செய்து பாராட்டலாம்.

சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் பாராட்டப்படுவதை விரும்புகிறார்கள்.

கணவனால் பாராட்டப்படும் மனைவி

தாய் தந்தையால் பாராட்டப்படும் பிள்ளைகள் மதிக்கப்படுவதாகவும் ஏற்றுக்கொள்ளப் படுவதாகவும் உணர்ந்து மனமகிழ்ச்சி அடைவார்கள்.

சமூகத்தால் பாராட்டப்படுபவர்கள் சமூகம் எங்களை அங்கீகரிக்கிறது என்று சந்தோசம் அடைவார்கள்.

எமது பிள்ளைகளாகட்டும் சமூக உறுப்பினராகட்டும் எவராயினும் அவர் பாராட்டுக்கு உள்ளாகும் போது சுறுசுறுப்பானவராக, ஆற்றல் நிறைந்தவராக உதவி ஒத்துழைப்பவராக ஆகிவிடுகிறார்.

கணவன், மனைவி, பிள்ளைகள் ஒரு சிறிய செயலை செய்வதை கண்டதுமே அவர்களை பாராட்ட வேண்டும். பாராட்டும் பழக்கம் வீட்டுக்குள் இருந்து ஆரம்பிக்கிறது. ஒவ்வொருவரும் செய்கின்ற சிறிய விடயங்களை பாராட்டும் போது பெரிய விடயங்களில் ஈடுபட அவர்களுக்கு ஊக்கம் கிடைக்கிறது.

பாராட்டப்படும் பிள்ளைகள் அறிவாளிகளாக, ஆற்றல் மிக்கவர்களாக, நல்ல பழக்கம் உடையவர்களாக ஆகுகிறார்கள்.

இன்று எமது சமூகத்தில் பாராட்டப்பட வேண்டிய பலர் பாராட்டுக்கு உட்படாமல் இருப்பதை காணலாம். பாராட்டுக்கள் எவ்வளவு கிடைக்குமோ அவ்வளவு அவர்கள் சமூகத்திற்கு பயனுள்ளவர்களாக இருப்பார்கள். பாராட்டு கிடைக்காதபோது ஒதுங்கி இருக்க முற்படுவார்கள். இது சாதாரண மனித இயல்பு. எவர் பாராட்டப்பட வேண்டுமோ தவறாமல், தாமதமாகாமல் பாராட்டுவது முக்கியமாகும்.

”பணம் செய்யாததை பாராட்டு செய்யும்” என்று நாம் கேட்டிருக்கிறோம்.

பயனுள்ள மனிதர்களை உருவாக்க வேண்டுமானால் அவர்கள் வீட்டில், பாடசாலையில் வாழும் சூழலில் சரியான நேரத்தில் பாராட்டப்படுவது மிகவும் முக்கியமாகும்.

“நல்ல செயல்கள் என்கின்ற கனியை அதிகமாக

பெற்றுக் கொள்வதற்குறிய வழி

அந்த மரங்களுக்கு பாராட்டு என்கின்ற தண்ணீரை பாய்ச்சுவதாகும்”

மனித வளர்ச்சிக்கு தேவையான, சமூக ஆர்வத்துக்கு தேவையான,

ஆரோக்கிய இரத்தமாக இருப்பது

ஊக்குவித் தலுடன் கூடிய பாராட்டு தலாகும்.

நாம் அமைதியான விமர்சனத்தையும்

உயர்வான முறையிலான பராட்டுதல்களையும்

வழங்குபவர்களாக இருப்போமேயானால்

எமது சமூகத்தில்

அன்பும் ஊக்கமும் மனித நெருக்கமும் நிரம்பி ஓடும்.



அஸ்ஹுர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

## பொரல்வதுர கதீஜா ஜூம்ஆப் பள்ளிவாசல் மேல் மாடியின் திறப்பு விழா





(பீ.எம்.முக்தார்)

கொத்மலை தொகுதியில் உள்ள ஹபுகதலாவ,பொரல்வதுர கிராமத்தின் மஸ்ஜிதுல் கதீஜா ஜூம்ஆப் பள்ளிவாசல் மேல் மாடியின் திறப்பு விழா 2024-02-16ஆம் திகதி ஜூம்ஆத் தொழுகையின் பின்னர் இடம்பெற்றது.

தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் கலாநிதி நஜீப் ஹாஜியார் பின் அமீர் ஆலிம் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

பள்ளிவாசல் நிர்வாக சபை தலைவர் முஹம்மத் நளீம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வு தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய பணிப்பாளர் டாக்டர் ரஹ்மதுல்லாஹ் நஜீப் மேற்படி பள்ளிவாசல் நிர்வாக சபை செயலாளர் முஹம்மத் பாஹிர் உட்பட நிர்வாகிகள் ஊர் ஜமாதார்கள் கலந்து கொண்டனர்.

பள்ளிவாசல் கதீப் மௌலவி முஹம்மத் நிஸார் (நுலாரி) ஜூம்ஆத் தொழுகையை நடாத்தினார். இறை இல்லங்களை அமைப்பதனால் கிடைக்கும் நன்மைகள் குறித்து தனது ஜூம்ஆப் பிரசங்கத்தில் குறிப்பிட்டார்.

கலாநிதி நஜீப் ஹாஜியார் 1976 ஆம் ஆண்டில் இப் பள்ளிவாசலின் கதீபாக கடமையேற்று சில வருட காலம் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. இந் நிகழ்வில் உரையாற்றிய கலாநிதி நஜீப் ஹாஜியார் கூறியதாவது - இறை இல்லங்களை அமைப்பதும் மார்க்க கல்வி உலகக் கல்விக்கு கைகொடுத்து உதவுவதும் முஸ்லிம் தலைவர்களின் கடமையாகும். அல்லாஹ்வுக்கு மிகவும் விருப்பமான செயல் இறை இல்லங்களை அமைப்பதாகும்.

இப்பள்ளி வாசலில் கதீபாக கடமையாற்றி இவ்வூர் மக்களின் இன்ப துன்பங்களில் பங்கேற்றேன். சிறப்பாக கடமையாற்றியதன் மூலம் ஊர் மக்களின் மதிப்பையும் மரியாதையையும் பெற்றுக் கொண்டேன்.

இன்று இப் பள்ளிவாசலின் மேல் மாடி எனது கரங்களினால் திறந்து வைப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

அல்லாஹ்வின் அருளும் தூய எண்ணமும் நல்ல ஒரு செயலின் வெற்றிக்கு வழியமைக்கும். பள்ளிவாசல் என்பது ஒரு ஊரின் இதயமாம். தொழுகை உட்பட நல்ல அமல்கள் செய்வதுடன் சமூகத்தின் விமோசனத்திற்கான வேலைத் திட்டங்களை மஸ்ஜிதை மையப்படுத்தி மேற்கொள்வோம்.




பயாஸா பாஸில்

# செலவே இல்லாத தண்ணீரின் மகிமை

உடல் இளைப்பது முதல் புற்றுநோய் பாதிப்பு குறைவது வரை செலவே இல்லாத மருந்து ஒன்று இருக்கிறது. அதுதான் தண்ணீர். செலவே இல்லாத தண்ணீரின் மகிமை பற்றி நமக்குத் தெரிந்தும் அலட்சியப்படுத்தப்படுவது தான் வேதனையான வேடிக்கை.

பெரிய நகரங்களில் வாழும் பெரும்பாலானோர் தனியாரிடம் வாங்கி சாப்பிடும் கேன் வாட்டர் தான் நல்ல பாதுகாக்கப்பட்ட குடிநீர் என்று நினைக்கின்றனர்.

ஆனால், உண்மையில் மெட்ரோ தண்ணீரை குடித்தால் போதும் முக்கியமாக காய்ச்சி குடிக்க மறந்து விடக்கூடாது. நாம் சாப்பிடும், குடிக்கும் எதுவாக இருந்தாலும் அதில் உள்ள நல்ல சத்துக்கள் திரவமாகவும் திடமாகவும் பிரித்து பிரித்து வெளியேற வேண்டிய சமாச்சாரங்களை வெளியேற்றி சத்துக்களை திரவ வடிவில் ஏற்று உடலின் பாகங்கள் பிடித்துக் கொள்கின்றன.

இப்படித்தான் கல்சியம் , இரும்பு, ஹார்ட்போவைதர்ரேட் என்று எல்லாம் உடலில் சேர்கிறது. சாப்பிடும் போது தண்ணீர் குடிப்பது போன்று உணவு சாப்பிடும் போது மட்டும் குடிப்பது போதாது. தண்ணீர் குடிப்பதை பழக்கப்படுத்த வேண்டும். தண்ணீர் தொடர்பான பழங்கள் காய்கறிகள் அதிகம் சேர்க்க வேண்டும் என்னதான் உடற்பயிற்சி செய்தாலும் டானிக் சாப்பிட்டாலும் உடல் எடை குறையாது ஆனால் தொடர்ந்து தண்ணீர் குடித்து வாருங்கள் ஒரு மாதத்திலேயே ரிசல்ட் தெரிந்துவிடும்.

# முருங்கைக்கீரையின் முக்கியத்துவம்

முருங்கைக்காய் போன்றே முருங்கைக் கீரையிலும் ஏராளமான சத்துக்கள் அடங்கியுள்ளன. வாரத்திற்கு இருமுறையாவது இதனை உணவில் சேர்த்துக் கொள்வதால் நோய் எதிர்ப்பு சக்தி கிடைக்கும். மந்தம் , தலைநோய் , மூர்ச்சை, கண் நோய் போன்ற நோய்கள் நீங்கும். முருங்கையை சமைத்து சாப்பிட்டால் உடல் வலுப்பெறும்.

முருங்கைக் கீரையில் அதிகமாக இரும்பு சத்து மற்றும் கால்சியம் உள்ளது உடல் மெலிவாக இருப்பவர்கள் வாரம் .இரண்டு முறை முருங்கைக் கீரையை உண்டு வந்தால் உடல் தேறும். முருங்கை இலையில் விட்டமின் ஏ பி சி கல்சியம் இரும்புச்சத்து நிறைந்துள்ளது ஒரு கிண்ணம் முருங்கைச்சாற்றில் ஒன்பது முட்டை அல்லது அரை கிலோ வெண்ணை அல்லது எட்டு டம்ளர் பாலில் அடங்கியுள்ள விட்டமின் இருக்கும் வயிற்றுப்புண்ணை ஆற்றும் அஜீரணக் கோளாறுகளைப் போக்கி மலச்சிக்கலை நீக்கும்.

இரத்தத்தில் கலந்து இருக்கும் தேவையில்லாத நீர்களை பிரித்து வெளியேற்றும் சிறுநீரை பெருக்குவதால் உயர் இரத்த அழுத்த நோய் இருப்பவர்கள் பக்க விளைவு ஏற்படுத்தும் மாத்திரைகளை தினமும் எடுத்துக் கொள்வதிலிருந்து தப்பிக்கலாம்.

உடல் சூட்டை குறைக்கும். கண்பார்வை வலுப்பெறும். பித்தத்தையும் குறைக்கும் உடல் சருமத்தை பளபளக்கச் செய்யும் தாய்ப்பாலை அதிகமாக ஊற வைப்பதால் குழந்தை பெற்றெடுத்த தாய்மார்கள் கண்டிப்பாக உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.



# தங்கக் காலணி விருது வென்ற தங்க மகன் கஹட்டோவிட்ட ஹஸீப்







லி புலூஸ் கோவா ஏற்பாட்டில் குவைத்தில் நடைபெற்ற அணிக்கு 4 பேர் கொண்ட ரிங்க் கால்பந்து சுற்றுப்போட்டியில் சிலோன் உதைப்பந்தாட்ட அணி 2ஆம் இடத்தினைப் பெற்றுக் கொண்டதுடன், அவ் அணிக்காய் விளையாடிய கஹட்டோவிட்டவைச் சேர்ந்த ஹஸீப் தங்கக் காலணி விருதை தனதாக்கினார்.

16 அணிகள் கலந்து கொண்ட இத் தொடர் விஷேட போட்டி விதிகளை உள்ளடக்கி அணிக்கு நான்கு பேர் கொண்ட போட்டியாக இடம்பெற்றது. இச் சுற்றுப்போட்டியில் லீக் மற்றும் நொக் அவுட் உட்பட 3 சுற்றுக்களிலும் 5 போட்டிகளை வெற்றி கொண்ட சிலோன் உதைப்பந்தாட்ட அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்று மயிரிழையில் போராடித் தோற்றது. இதனால் பலமிக்க பல அணிகள் பங்கேற்ற தொடரின் இரண்டாம் இடத்திற்கான விருதை வெற்றி கொண்டது.

அத்துடன் சிலோன் உதைப்பந்தாட்ட அணியின் இறுதிப் போட்டி வரையான நகர்வுக்கு பிரதான பங்களிப்பை செய்த பதுரியன்ஸ் அணியை பிரதிநிதித்துவப்படுத்தும் கஹட்டோவிட்ட உதைப்பந்தாட்ட அணியின் முன்கள வீரரான ஹஸீப் ஒரு மிகத் திறமையான கோலை உட்செலுத்தியதுடன் நான்கு கோல்களுக்கு துணைநின்றமைக்கும் சேர்த்து இத் தொடரின் சிறந்த வீரருக்கான தங்கக் காலணி விருதை வெற்றி கொண்டு அசத்தினார்.

தொழில் ரீதியாக வெளிநாடு சென்ற போதிலும் தன் உதைப்பந்தாட்டத் திறமையினை கடல் கடந்தும் வெளிப்படுத்தி தன் ஊருக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்க்கும் ஹஸீப் உட்பட சிலோன் உதைப்பந்தாட்ட அணி வீரர்களுக்கு உதயம் பத்திரிகையின் சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்கள்.

# விடா முயற்சி விஷ்வரூப வெற்றி! மெய்ப்பித்துக் காட்டிய இந்தியாவின் சர்பராஸ்கான்


அரபாத் பஹுர்தீன்

கிரிக்கெட்டை நேசித்து அதன் மீது காதல் கொண்டு சிறு வயதுமுதல் கடும் பயிற்சியுடனும், கடின முயற்சியுடனும் ஒவ்வொரு கிரிக்கெட் வீரனின் இலக்கும் தன் நாட்டு தேசிய அணியின் சீருடையினை அணிந்து தனது நாட்டுக்காய் விளையாடிவிட வேண்டும் என்பது தான். அதற்கு இந்தியாவின் சர்பராஸ் நௌசாட்கான் எனும் இந்திய தேசிய அணியின் வீரன் நல்ல உதாரணம்.

1997ஆம் ஆண்டு இந்தியாவின் மும்பை நகரில் நௌசாட்கான் தம்பதிகளுக்கு மகனாகப் பிறக்கிரார் சர்பராஸ்கான். சிறுவயது முதலே கிரிக்கெட்டை முழுமையாக நேசிக்கும் இவர் தன் தந்தை நௌசாட்கானிடம் கிரிக்கெட் பயிற்சியை பெற்று ஒரு சிறந்த துடுப்பாட்ட வீரராக உறுவாகி வருகிறார். இந்நிலையில் மும்பையில் புகழ்பெற்ற பாடசலை அணிகளுக்கிடையிலான தொடரான ஹரிஸ் சீல்ட் இன்டர் ஸ்கூல் தொடரில் ஒரு போட்டியில் 12 வயதான சர்பராஸ்கான் 56 நான்கு ஓட்டங்கள் மற்றும் 12 ஆறு ஓட்டங்கள் அடங்களாக 439 ஓட்டங்களை விளாசி வரலாற்று சாதனை படைக்கின்றார். இதனால் மும்பை கிரிக்கெட் சங்கம் யார் இந்த சர்பராஸ்கான் என தேட ஆரம்பிக்கின்றது.

இதனால் சர்பராஸ்கான் வயதை குறைத்து மேசடி செய்து இத் தொடரில் பங்கேற்றார் என்ற குற்றத்தை சுமத்தி அவரது 439 ஓட்டங்கள் என்ற வரலாற்று சாதனையை நிராகரித்துடன் அவரை மும்பை அணிக்காக உள்ளீர்த்துக் கொண்டது. தொடர்ந்து கழக மட்ட போட்டிகளில் அசத்திய வலதுகைத் துடுப்பாட்ட வீரரும் , சுழற்பந்து வீச்சாளராகவும் நிற்றுவிடாது விக்கெட்காப்பாளராகவும் சர்பராஸ்கான் 2014ஆம் ஆண்டு ஐக்கிய அரபு இராச்சியத்தில் இடம்பெற்ற 19 வயதுக்குட்பட்டோர் உலகக்கிண்ணத் தொடரில் இந்திய அணியை பிரதிநிதித்துவம் செய்யும் வாய்ப்பைப் பெற்றுக் கொள்கிறார்.

இத் தொடரில் தனது அதிரடி மூலம் மிகச் சிறந்த துடுப்பாட்ட திறமையை வெளிப்படுத்திய 17 வயதான சர்பராஸ்கான் 6 போட்டிகளில் 70.33 என்ற ஓட்ட சராசரியுடன் 211 ஓட்டங்களை மொத்தமாக விளாசியிருந்தார். இதனால் உலகம் முழுக்க அறியப்பட்ட இவர் 2015 ஆம் ஆண்டு உலகின் முன்னனி ரி20 தொடரான இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் விராட் கோஹ்லி, கிறிஸ் கெய்ல் போன்ற உலகத் தரம் வாய்ந்த விரர்கள் உள்ள பெங்களூர் ரோயல் செலஞ்சர்ஸ் அணிக்காக 50 லட்சம் இந்திய ரூபாய்களுக்கு ஏலம் எடுக்கப்பட்டார். இதனால் குறைந்த வயதில் இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் ஏலம் எடுக்கப்பட்ட வீரர் என்ற பெருமைக்கும் சொந்தக்காரரானார் சர்பராஸ்கான்.

பின்னர் 2016 ஆம் ஆண்டு வளர்ந்து வரும் அணிகள் மோதிய தொடரில் இந்திய வளர்ந்துவரும் அணிக்காகப் பங்கேற்ற இவர் 6 போட்டிகளில் 355 ஓட்டங்களை விளாசி அத் தொடரில் அதிக ஓட்டங்களைப் பெற்ற வீரர் என்ற பெருமையையும் தனதாக்கிக் கொண்டார். இவ்வாறு துடுப்பாட்டத்தில் கலக்கிய சர்பராஸ்கான் 2020ஆண்டு இடம்பெற்ற இந்திய கழக மட்ட தொடரான ரஞ்சி கிண்ண டெஸ்ட் தொடரில் மும்பை அணியைப் பிரதிநிதித்துவம் செய்து உத்திரப் பிரதேஸ் அணிக்கு எதிரான ஆட்டமிழக்காமல் 301 ஓட்டங்களை விளாசினார். இதில் 30 நான்கு ஓட்டங்கள் மற்றும் 8 ஆறு ஓட்டங்கள் அடங்குவதுடன் வெறும் 391 பந்துகளையே எதிர்கொண்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

இந்த அசத்தலான துடுப்பாட்டத்தால் ஒருநாள் போட்டிகளில் மாத்திரம் உச்சரிக்கப்பட்ட சர்பராஸ்கானின் பெயர் டெஸ்ட் கிரிக்கெட்டிலும் உச்சரிக்கப்பட ஆரம்பித்தது. பின்னர் இறுதியாக கடந்த மாதம் இடம்பெற்ற இங்கிலாந்து லயன்ஸ் கழகத்திற்கு எதிரான போட்டியில் இங்கிலாந்து பந்துவீச்சாளர்களை விளாசித் தள்ளிய சர்பராஸ்கான் 161 ஓட்டங்களைப் பெற்றதுடன் அடுத்தடுத்த போட்டி இன்னிங்களில் 4, 55 மற்றும் 96 ஓட்டங்களை விளாசினார். இதனால் இந்திய தேர்வாளர்களை தன் பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தார். அதற்கமைய இந்தியாவில் இடம்பெற்றுவரும் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் ஒரு போட்டி முடிவுற்றிருக்க இந்திய அணியின் மத்திய வரிசை வீரரான ஸ்ரோயஸ் ஐயர் காயம் காரணமான அணியிலிருந்து வெளியேறியிருந்தார். இதனால் இந்திய தெரிவுக் குழு 26 வயதான சர்பராஸ்கானை 15 வீரர்கள் கொண்ட அணியில் இணைத்துக் கொண்டது.

இருப்பினும் 2ஆவது போட்டியில் சர்பராஸ்கான் தனது டெஸ்ட் அறிமுகத்தை பெற்று தன் கனவினை நனவாக்குவார் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் ஆடும் பதினொருவர் அணியில் அவருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. இருப்பினும் மாற்று விரராக களத்தடுப்பிற்கு ஈடுபடுத்தப்பட்டார் இவர். ஆப் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றுக் கொள்ள தொடர் 1:1 என சமநிலைபெற்றது. பின்னர் கடந்த 15ஆம் திகதி ஆரம்பித்த இங்கிலாந்து அணிக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியில் இந்திய பதினொருவர் அணி அறிவிக்கப்பட மிக நீண்ட நாட்கள் செய்த கடும் பயிற்சி மற்றும் முயற்சிக்கு பதில் கிடைக்கும் வகையில் சர்பராஸ்கான் எனும் பெயர் அப்பட்டியலில் இடம்பெற்றிருந்தது.

அன்றைய நாள் இந்திய அணி விரர்கள் சூழ்ந்திருக்க இந்திய அணியின் முன்னால் சுழல்பந்து நட்சத்திரம் அணில் கும்லேயின் கரங்களால் இந்திய தேசிய அணியின் 311ஆம் இலக்க டெஸ்ட் தொப்பி வழங்கப்பட






சர்பராஸ்கானின் விடா முயற்சி விஸ்பரூப வெற்றியாக கொண்டாடப்பட்டது. அத் தொப்பியைப் பெற்றுக் கொண்டு அவரின் பயிற்றுவிப்பாளரும் தந்தையுமான நௌசாட்கானை ஓடி வந்து ஆரத் தழுவிக் கொள்ள அவர் தந்தையில் கண்களில் கண்ணீரோரு தன் மகனான இந்திள தேசிய கிரிக்கெட் அணியின் வீரர் சர்பராஸ்கானின் நெற்றியில் முத்தமிட்டதுடன் அவரில் தொப்பிலில் இருக்கின்ற இந்திய கிரிக்கெட் அணியின் இலட்சணையிலும் முத்தமிட்ட காட்சி கிரிக்கெட் ரசிகர்களை பெரிதும் கவர்ந்தது. முதல் நாள் ஆட்டத்திலே சர்பராஸ்கான் துடுப்பெடுத்தாடும் சந்தர்பம் கிடைக்க இந்திய அணியின் தலைவரான ரோஹித் சர்மா ஆட்டமிழந்து வெளியேறிச் செல்ல சர்பராஸ்கான் இந்திய தேசிய அணியின் சீருடையில் இலக்கம் 97 சர்பராஸ் என்ற பெயர் பெரித்துக் கொண்டு மைதானம் நுழைந்தார். அப்போது ரோஹித் சர்பராஸை தோளித் தட்டி அனுப்பி வைத்தார்.

முதல் சர்வதேச போட்டி, முதல் இன்னிங்ஸ் களத்தில் நின்ற சர்பராஸ்கான் எந்த வித பதட்டமும் இன்றி பந்துகளை எதிர் கொண்டதுடன் நான்கு ஆறு என்று விளாச ஆரம்பித்து 49 பந்துகளில் அரைச்சதம் கடந்து மிரட்ட இங்கிலாந்து பந்துவீச்சாளர்கள் ஆட்டம் கண்டனர். சுரபராஸின் அரைச்சதம் மைதானத்தில் இருந்த ரசிகர்களால் மட்டுமன்றி ஒட்டுமொத்த கிரிக்கெட் ரசிகர்களாலும் வாழ்த்தப்பட்டது. தொடர்ந்தும் துடுப்பாட்டத்தில் மிரட்டியச ர்பராஸ்கான் 66 ஓட்டங்களைப் பெற்றிருக்க ரவீந்திர ஜடேஜாவின் ஒருப்பற்ற அழைப்பின் பேரில் ஓடி துரதிஸ்ட வசமாக ரன்அவுட் ஆகி வெளியேற மைதானம் அமைதியில் உறைந்தது. போட்டி முடிவடைந்ததன் பின் சர்பராஸ்கானின் ஆட்மிழப்பு தொடர்பில் ரவீந்திர ஜடேஜா குறிப்பிடுகையில் தன்னால் தார் சர்பராஸ் ஆட்டமிழந்ததாகவும், அவர் சிறப்பாக துடுப்பெடுத்தாடியதாகவும் தன் கவலையை வெளியிட்டிருந்தார்.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.